# ஏழு எக்காளங்களின் வெளிப்பாடு

## பகுதி 5

**(The Revelation of The Seven Trumpets – Part 5)**

மார்ச் 06**, 2016,** கல்வாரி சபை, சென்னை

**(March 06, 2016, Calvary Tabernacle, Chennai)**

போதகர் **A.** சாமுவேல்

**(Pastor A. Samuel)**

எங்களை நேசிக்கிற நல்ல ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம். இந்த அருமையான காலை வேளையில், உமக்கு ஆராதனைச் செய்யும்படியாக, கர்த்தருடைய பிள்ளைகளாகிய எங்களை, தூரத்திலிருந்தும் சமீபத்திலிருந்தும் கூட்டிச்சேர்த்திருக்கிறீர். நீரே எங்களுக்கு அந்த வாஞ்சையைத் தந்திருக்கிறீர். ஆண்டவரே, நீர் எங்களுக்கு உம்முடைய வார்த்தையின்மேல் தாகத்தைத் தந்திருக்கிறீர். "கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் என்று சொன்னபோது நான் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தேன்" என்று தாவீதுக்குக் கொடுத்த அந்த சந்தோஷத்தைக் கொடுத்திருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். "மானானது நீரோடைகளை வாஞ்சித்து கதறுவதுபோல, என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது" என்று தாவீதுக்குக் கொடுத்த அவ்விதமான ஒரு தாகத்தை எங்களுக்கு நீர் கொடுத்திருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

உலகத்தோற்றத்துக்கு முன்னே எங்களை நீர் தெரிந்துகொண்டீர். எங்களை நீர் மாம்சத்தில் கொண்டுவந்தீர். இந்தக் கடைசிகாலத்திலே நீர் எங்களை கொண்டுவந்திருக்கிறீர். வார்த்தையானது எங்களை சந்திக்கும்பொழுது, அந்த அழைப்பிற்கு நாங்கள் செவிகொடுக்கும்படியாக நீர் எங்களுக்குக் கிருபை தந்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் சத்தியத்தை விசுவாசித்து, கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்று, உம்முடைய குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் இருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். கர்த்தாவே, நீர் எங்களுக்கு புத்திரசுவிகாரத்தின் ஆவியை அனுப்பியிருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்களுக்குக் கொடுத்த வெளிப்பாடுகளுக்காக, சத்தியத்திற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

நீர் இந்த உலக வாழ்க்கையிலே எங்களுக்கு உதவிசெய்கிறவராக இருப்பதற்காக ஸ்தோத்திரம். எங்களை நீர் போஷித்து, பராமரித்து வருவதற்காக உமக்கு ஸ்தோத்திரம். காட்டுப் புஷ்பங்களை உடுத்துவிக்கிற தேவன், எங்களை உடுத்துவிப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்களுடைய தேவைகளை நீர் சந்திப்பதற்காக ஸ்தோத்திரம். எங்களுடைய ஜெபங்களை நீர் கேட்டதற்காக ஸ்தோத்திரம். எங்கள் வாழ்க்கையிலே நீர் கொடுத்த எல்லா நன்மைகளுக்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம், மகிமை செலுத்துகிறோம். கர்த்தாவே, எங்கள் உள்ளத்தை நீர் பரிசுத்த ஆவியால் நிரப்புவீராக. எங்களுடைய கவலைகளையும், பாரங்களையும், சோர்வுகளையும் அப்புறப்படுத்துவீராக. எங்களுடைய இருதயம் தேவன் பேரில் பொங்கி வழியட்டும். கர்த்தாவே, அது சந்தோஷத்தால் நிரம்பட்டும். நீர் கொடுத்த வெளிப்பாடுகளைச் சுற்றிலும் ஐக்கியப்படும்படியாக நாங்கள் வந்திருக்கிறோம்.

உலகத்தில் எத்தனையோ கோடி மக்கள் இருந்தாலும், ஒரு சிறு கூட்டத்தை உம்முடைய மணவாட்டியாக நீர் தெரிந்துகொண்டிருக்கிறீர். நாங்கள் அதில் ஒரு அங்கத்தினராக இருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இந்தக் காலை வேளையிலே உம்முடைய வார்த்தையைச் சுற்றிலும் ஐக்கியப்பட, வார்த்தையாக மாற எங்களுக்குக் கிருபை தருவீராக. உம்முடைய வேதத்தின் ஒவ்வொரு பகுதியையும் நாங்கள் நேசிக்கிறோம். கர்த்தாவே, உம்முடைய வார்த்தைகள் ஒவ்வொன்றையும் நாங்கள் நேசிக்கிறோம். அதை எங்கள் வாழ்க்கையில் நாங்கள் அப்பியாசப்படுத்த, அதோடுகூட எங்கள் வாழ்க்கையை இணைக்க, நீர் எங்களுக்குக் கிருபை தருவீராக.

இப்பொழுதும், உம்முடைய பொக்கிஷத்தில் நீர் என்ன வைத்திருக்கிறீரோ, அதை எங்களுக்குத் தரவேண்டுமென்று ஜெபிக்கிறோம். ஆண்டவரே, அதை

வெளிப்படுத்தவேண்டுமென்று ஜெபிக்கிறோம். எங்களை உம்முடைய வருகைக்கென்று ஆயத்தப்படுத்தும். இங்கே, முழங்கால்படியிட்டிருக்கிற அனைவரையும் ஆசீர்வதியும். தாமதித்துக்கொண்டிருக்கிற உம்முடைய பிள்ளைகளைக் கூட்டிச் சேர்ப்பீராக. இந்தத் தொழுவத்தில் இல்லாத வேறே ஆடுகளையும் நீர் கூட்டிச்சேர்க்கவேண்டும் என்று ஜெபிக்கிறோம். ஆசீர்வதியும், கிருபையாயிரும். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

<u>*ஆதியாகமம்* **6: 8 - 13**</u>

8. நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது.
9. நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்.
10. நோவா சேம் காம் யாப்பேத் என்னும் மூன்று குமாரரைப் பெற்றான்.
11. பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது.
12. தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள்.
13. அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவேன்.

<u>*வெளி* **11: 15 – 19**</u>

15. ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.
16. அப்பொழுது தேவனுக்கு முன்பாகத் தங்கள் சிங்காசனங்கள்மேல் உட்கார்ந்திருந்த இருபத்துநான்கு மூப்பர்களும் முகங்குப்புற விழுந்து:
17. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே, உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்; தேவரீர் உமது மகா வல்லமையைக்கொண்டு ராஜ்யபாரம்பண்ணுகிறீர்.
18. ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது; மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது என்று சொல்லி, தேவனைத் தொழுதுகொண்டார்கள்.
19. அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது; அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின.

<u>*ஆதியாகமம்* **4: 25, 26**</u>

25. பின்னும் ஆதாம் தன் மனைவியை அறிந்தான்; அவள் ஒரு குமாரனைப் பெற்று: காயீன் கொலைசெய்த ஆபேலுக்குப் பதிலாக, தேவன் எனக்கு வேறொரு புத்திரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குச் சேத் என்று பேரிட்டாள்.

26. சேத்துக்கும் ஒரு குமாரன் பிறந்தான்; அவனுக்கு ஏனோஸ் என்று பேரிட்டான்; அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்.

இன்றைக்குக் கொடுக்கப்போகிற செய்தி என்னவென்றால், ஏழு எக்காளங்களின் வெளிப்பாடு – பாகம் 5. கர்த்தர் சித்தமானால், இன்னும் இரண்டு பிரசங்கம் இருக்கிறது. நீங்கள் நன்றாக கவனியுங்கள். முதலாவது பிரசங்கத்திலே, ஏழு பண்டிகைகளைக் குறித்தும், யோசேப்பின் வாழ்க்கையில் ஏழு எக்காளங்கள் எப்படி வருகிறதென்பதைக் குறித்தும் நான் உங்களுக்குப் போதித்தேன். இரண்டாவது பிரசங்கத்திலே, ரூத், நகோமியின் வாழ்க்கையில் ஏழு எக்காளங்கள் எவ்விதமாக கிரியைச் செய்கிறதென்பதைப் பார்த்தோம். மூன்றாவது பகுதியிலே, மத்தேயு 24ம் அதிகாரத்தையும், சகோ. பிரன்ஹாம் கண்ட ஏழு தரிசனங்களையும், ஏழு எக்காளங்கள் எப்படி வெளிப்படுத்துகிறது என்பதைப் பார்த்தோம். கடந்த வாரத்திலே, நாலாவது பகுதியாக, ஆதியாகமத்தில் தேவன் எவ்விதமாக சிருஷ்டிகளை உண்டாக்கினார், அது எவ்வளவு அழகாக இருந்தது, ஏழு எக்காளங்களின்போது இயற்கை எவ்விதமாகப் பாதிக்கப்படுகிறது, உலக யுத்தங்கள் எவ்வாறு வருகிறது என்பதையும் பார்த்தோம். இன்றைய தினத்தில், நோவா காலத்தை அடிப்படையாக வைத்து நான் செய்தியைக் கொடுக்க விரும்புகிறேன்.

வெளிப்படுத்தின விசேஷமானது பழைய ஏற்பாட்டுச் சின்னங்களினாலே எழுதப்பட்டிருக்கிறது. அதிலிருக்கிற சின்னங்கள் **(Symbols)** எல்லாமே பழைய ஏற்பாட்டில் இருக்கிறது. நீங்கள் எந்த சின்னத்தைப் பார்த்தாலும் அது பழைய ஏற்பாட்டில் இருக்கிறது. இந்த ஏழு சபைக்காலங்களைப் பார்க்கும்போது, ஏழு பொன் குத்துவிளக்குகள் பழைய ஏற்பாட்டில் இருக்கிறது. அதைப்போல, நான்கு ஜீவன்களும் அங்கே இருக்கிறது. எல்லாமே பழைய ஏற்பாட்டில்தான் இருக்கிறது. இதிலிருக்கிற ஒவ்வொரு வசனத்தையும் பழைய ஏற்பாட்டில் பொருத்தலாம். வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிக்கும்போது, பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் நமக்குத் தெளிவாக மாறுகிறது. அந்த புஸ்தகத்தை நாம் நேசிக்கிறோம். எத்தனைப்பேர் நேசிக்கிறோம்? வேதத்தில் இருக்கிற 66 புஸ்தகங்களையும் நாம் நேசிக்கிறோம். அல்லேலூயா. இயேசுகிறிஸ்து அச்சு வடிவத்தில் இருப்பதுதான் இந்த வேதாகமம் **(God in Printed Form)**. இந்த வார்த்தையின் ஒவ்வொரு பகுதியையும் நாம் நேசிக்கிறோம். இதிலே இரகசியங்கள் அடங்கியிருக்கிறது. எல்லா இரகசியமும் இயேசுகிறிஸ்துவுக்குள் இருக்கிறது. தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் இருக்கிறது. இந்த வேதப்புஸ்தகத்திற்குள் எல்லாம் இருக்கிறது. இது இயேசுகிறிஸ்துவின் வெளிப்பாடாய் இருக்கிறது.

வெளிப்படுத்தின விசேஷத்தில் எல்லாம் இருக்கிறது. அதை ஆண்டவர் தீர்க்கதரிசி மூலமாக அங்கேயும் இங்கேயும் சிதறிப் போட்டிருக்கிறார். ஒரு போதகர் **(Pastor)** அபிஷேகத்தின் கீழ் அதை ஒன்று சேர்க்கிறார். தீர்க்கதரிசி ஊழியம் நமக்கு அவசியம். அதன்பின்பு போதக ஊழியமும் அவசியம். கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும்

ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும். (ஏசாயா 34: 16). அபிஷேகத்தின் கீழ் அந்த வார்த்தையை ஜோடு ஜோடாக சேர்ப்பதுதான் போதக ஊழியம். அந்த ஊழியம்தான் இப்பொழுது நம்மத்தியில் இருக்கிறது.

ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில், ஆண்டவர் எல்லாவற்றையும் எப்படி உண்டாக்கினார் என்று, சிருஷ்டிப்பைக் குறித்துப் பார்க்கிறோம். இரண்டாம் அதிகாரத்தில், ஆதாமையும், ஏவாளையும் உண்டாக்கி அவர்களை இணைத்ததைப் பற்றி வாசிக்கிறோம். மூன்றாம் அதிகாரத்திலே, சர்ப்பமானது ஏவாளை எப்படி வஞ்சித்தது, கர்த்தர் அவர்களுக்கு என்ன சாபத்தைக் கொடுத்தார் என்றும், ஏதேனைவிட்டு அவர்கள் எப்படி துரத்தப்பட்டார்கள் என்றும் பார்க்கிறோம். நாலாம் அதிகாரத்திலே, காயீனின் சந்ததியைப் பார்க்கிறோம். காயீனும், ஆபேலும் பலியைக் கொண்டுவருகிறார்கள். கர்த்தர் காயீனின் பலியைப் புறக்கணிக்கிறார். அவன் தேவசமுகத்தைவிட்டுப்போய் ஒரு பட்டணத்தைக்கட்டி அவன் ஒரு பெரிய சந்ததியாக மாறுகிறான். ஐந்தாம் அதிகாரத்திலே, சேத் சந்ததியைப் பற்றி வாசிக்கிறோம். சேத் சந்ததிதான் ஆதாமின் சந்ததி.

நாலாம் அதிகாரத்திலே, சர்ப்பத்தின் வித்துக்களை நாம் பார்க்கிறோம். ஐந்தாம் அதிகாரத்திலே, தேவபுத்திரரை நாம் காண்கிறோம். ஆதாமின் சந்ததி அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆறாம் அதிகாரம் வரும்போது, நோவாவின் காலமாயிருக்கிறது. இரண்டு சந்ததியும் கலந்துவிடுகிறது. தேவகுமாரர்கள் மனுஷகுமாரத்திகள் அழகாக இருக்கிறார்கள் என்று கண்டு அவர்களில் பெண்களைத் தெரிந்துகொள்ளும்போது, கர்த்தர் இந்த உலகத்தை அழிக்க சித்தங்கொண்டார்.

கர்த்தர் நோவாவைச் சந்திக்கிறார். நோவாவுக்கு ஒரு செய்தியைக் கொடுக்கிறார். பேழையை உண்டுபண்ணும்படியாகச் சொல்லுகிறார். ஏழாம் அதிகாரத்திலே, அவன் பேழைக்குள் பிரவேசிக்கும்போது, கர்த்தர் நாற்பது நாட்கள் மழையை வருஷிக்கப்பண்ணுகிறார். ஆறாம் அதிகாரத்தில் பேழை **(Ark)**, ஏழாம் அதிகாரத்தில் மழை **(Rain)**, எட்டாம் அதிகாரத்தில் புறாவைப் **(Dove)** பார்க்கிறோம். அந்த புறா கடைசியாக ஒலிவ இலையைக் கொண்டுவரும்போது, அங்கே தண்ணீர் வற்றிவிட்டது என்று அவனுக்கு வெளிப்படுத்தினது. பின்பு, கர்த்தர் அவனை பேழையைவிட்டு வெளியே வரும்படி செய்தார். ஒன்பதாம் அதிகாரத்திலே, அவன் கர்த்தருக்கு பலி செலுத்தினான். கர்த்தர் வானவில்லை அடையாளமாகக் கொடுத்து அவனோடு உடன்படிக்கை செய்து, அவனை ஆசீர்வதித்தார். பத்தாம் அதிகாரத்தில், நோவாவின் சந்ததியை **(Noah's Generation)** நாம் பார்க்கிறோம். இவ்விதமாக அங்கே எழுதப்பட்டிருக்கிறது.

இந்த வேதாகமத்தில் **(Bible)** உள்ள ஒவ்வொரு அதிகாரத்தையும் நான் நேசிக்கிறேன். ஏன் நேசிக்கிறேன்? ஏனென்றால், இது தேவன் அச்சு வடிவத்தில் இருப்பது **(God in Printed Form)**. அச்சு வடிவத்தில் இருந்த தேவன், இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக மனுஷனாக வந்தார். இன்றைக்கு பலமுள்ள தூதனாக **(Mighty Angel)** வந்திருக்கிறார். அந்த அபிஷேகம் நமக்கு வருகிறது. பலமுள்ள தூதனின் அபிஷேகம் வரும்போது இந்த வேதத்தை நீங்கள் நேசிக்கமுடியும். வேதத்தை அறியாமல் தீர்க்கதரிசியின் செய்தியைப் புரியமுடியாது. வெறும் புஸ்தகத்தை (தீர்க்கதரிசியின் செய்தி) மட்டும் படிக்கிறவர்களுக்கு முழுமையான

புரிந்துகொள்ளுதல் **( Clear Understanding)** வராது. இதை நேசித்தால், அதைப் படிக்கும்போது நன்றாகப் புரியும். இதுதான் மூல வார்த்தை **(Original Word)**. இதுதான் **“**கர்த்தர் சொல்லுகிறதாவது**” (Thus Saith The Lord)**. இதில் இருக்கிற மறைபொருட்களை கர்த்தர் தீர்க்கதரிசியின் செய்தி மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறார். அல்லேலூயா. தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் வெளிப்பாடு இருக்கிறது. நாம் அதையும் நேசிக்கிறோம். ஆனால் வேதத்தை நாம் அறிந்திருக்கவேண்டும். பாட நூல் **(Text Book)** இல்லாமல், விளக்கவுரையை **(Notes)** படிக்கக்கூடாது. நமக்கு இந்த வேதாகமம்தான் பாட நூலாக இருக்கிறது. இவ்விதமான புரிந்துகொள்ளுதல் நமக்கு இருந்தால், நாம் நல்ல கிறிஸ்தவர்களாக மாறமுடியும்.

ஆதியாகமம் 4ம் அதிகாரத்திலே காயீன் சந்ததியைக் குறித்து வாசிக்கிறோம். காயீன் தேவசமுகத்தை விட்டு நோத் என்னும் தேசத்துக்குப் போனான். அங்கே போய் அவன் ஒரு பட்டணத்தைக் கட்டினான். அந்த பட்டணத்துக்கு அவன் ஏனோக்கு என்று பேரிட்டான். இங்கேயும் ஏனோக்கு இருக்கிறான், அங்கேயும் ஏனோக்கு இருக்கிறான். இவன் காயீனின் மகன். அந்த ஏனோக்கு கர்த்தருக்குப் பயந்து ஜீவித்தான். அல்லேலூயா. நாலாம் அதிகாரத்தில் இருப்பவர்கள் மனுஷகுமாரர்கள் **(Sons of men)**, மனுஷகுமாரத்திகள் **(Daughters of men)** என்று அழைக்கப்பட்டார்கள். ஐந்தாம் அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆதாமின் சந்ததி. அது சேத் சந்ததி. அவர்கள் தேவகுமாரர், தேவகுமாரத்திகள் என்று அழைக்கப்பட்டார்கள். இப்பொழுது, ஆறாம் அதிகாரத்திற்கு வரும்போது, தேவகுமாரர் **(Sons of God)** மனுஷகுமாரத்திகள் **(Daughters of men)** அழகாக இருக்கிறார்கள் என்று அவர்களுக்குள்ளே பெண்களைத் தெரிந்துகொள்ளும்பொழுது, இரண்டு வித்தும் கலப்படமாகிவிட்டது. ஆகையால், கர்த்தர் நோவாவின் குடும்பத்தைத் தவிர மற்ற எல்லாவற்றையும் அழித்துப்போட்டார்.

**ஆதியாகமம் 6: 2**

2. தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்.

இந்தப் பாளையம் தனியாக இருக்கிறது. இது காயீனுடைய சந்ததி. சர்ப்பத்தின் வித்துக்களாய் **(Serpent's Seed)** இருக்கிறார்கள். காயீன் சர்ப்பத்தின் குமாரன். அந்தப் பக்கத்தில், சேத் குடும்பத்தார் இருக்கிறார்கள். அவர்கள் ஆதாமின் சந்ததி **(Adam's Seed)**. அவர்கள் தேவபுத்திரர்களாய் இருக்கிறார்கள். இங்கிருந்து அழகான பெண்கள் அங்கே போனார்கள். போகும்போது அவர்களின் அழகில் தேவபுத்திரர் மயங்கிவிட்டார்கள். அவர்களில் தங்களுக்குப் பெண்களை எடுத்துக்கொண்டார்கள். அதனால் வித்து கலப்படமானது. இப்படி கலப்படமாகும்போது, ஆண்டவருக்கு சுத்தமான **(pure)** ஒரு சந்ததி இல்லாமல் போனது. எல்லாம் கலப்படமாக **(hybrid)** மாறிவிட்டது. சாத்தான் அந்த கலப்படத்தை ஏற்படுத்தும்போது, ஜனங்கள் விழுந்துபோனார்கள். தேவகுமாரர்கள் விழுந்துபோனார்கள். அதனால் கர்த்தர் அந்த சந்ததியை அழிக்கவேண்டும் என்று நினைத்தார்.

ஆதாமில் இருந்து பத்தாவது தலைமுறைதான் நோவா. அந்தப் பத்தாவது தலைமுறை வருவதற்கு இரண்டாயிரம் வருஷங்கள் ஆகிவிட்டது. ஆண்டவர் ஆதாமை

வெளியேற்றினபின்பு, இரண்டாயிரம் வருஷம் ஜனங்கள் பலுகிப் பெருகினார்கள். பூமியிலே, மக்கள் தொகை அதிவேகமாகப் பெருகினது **(Population Explosion)**.

**ஆதியாகமம் 6: 1**

1. மனுஷர் பூமியில் பெருகத் துவக்கி, அவர்களுக்குக் குமாரத்திகள் பிறந்தபோது:

மனுஷர் பூமியில் பெருகத் துவங்கி, அதிக மக்கள் தொகை ஏற்பட்டது. இந்தப் பாளையம் தனியாகவும், அந்தப் பாளையம் தனியாகவும் இருந்தது. ஆனால், மனுஷகுமாரத்திகளின் அழகில் தேவகுமாரர்கள் மயங்கி, அவர்களில் பெண்களைத் தெரிந்துகொள்ளும்போது, அது ஆண்டவருக்கு அதிக விசனமாக இருந்தது. அவர்கள் பார்வையில் அது சரியாக இருக்கலாம். ஆனால் வித்து கலப்படமாகிவிட்டது. என்றைக்குமே, உங்கள் பார்வைக்கு நீங்கள் நீதிமானாக இருப்பீர்கள். ஆனால் கர்த்தருடைய பார்வையில் எப்படி இருக்கிறோம்? நாம் நீதிமானாக இருக்கிறோமா? நீங்கள் உங்களைத் தேவனுக்கு முன்பாக நிறுத்தி சோதித்துப்பார்த்தால் உங்களுக்குத் தெரியும். உங்களுக்கு சில நேரத்தில் கவுரவம் அதிகமாகலாம், பெருமை அதிகமாகலாம். ஆனால் ஆண்டவர் எப்படி பார்க்கிறார்? நம்மைக் குறித்து நாமே வெட்கப்படவேண்டும். “ஆண்டவரே, நான் உம்மைப் பிரியப்படுத்தவில்லை, நான் உமக்குப் பிரியமாக ஜீவிக்கவில்லை, என்னுடைய சுபாவத்தை நினைத்து நானே வெட்கப்படுகிறேன், அதையெல்லாம் என்னை விட்டு எடுத்துப்போடும் என்று” சொல்பவர்கள்தான் உண்மையான விசுவாசிகள் **(Real Believers)**. இன்னும் நான் உமக்கு நெருங்கி வரவேண்டும் என்று சொல்லவேண்டும்.

நாங்கள் கர்த்தருக்குள் இன்னும் பலப்படவேண்டும் என்று எழுதிக்கொடுப்பார்கள். எழுதிக்கொடுத்தால் மட்டும் போதாது. கொஞ்சம் பிரயாசப்படவும் வேண்டும். போதகரும் சபையாரும் ஜெபிக்கிறார்கள், நாமும் எந்தக் காரியத்திலே பிரயாசப்படவேண்டுமோ அதிலே பிரயாசப்படவேண்டும். இதையெல்லாம் நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டிய நேரம். உங்களை நீங்களே நிதானித்துப் பார்க்கவேண்டும். புத்தி சொன்னால் சிலருக்குப் பிடிக்காது. எனக்கு புத்தி சொல்லுவதற்கு கஷ்டமாக இருக்கிறது. செய்தியிலேயே எல்லா ஆலோசனைகளும் இருக்கிறது. ஒருவருக்கு தனிப்பட்ட பிரகாரமாக ஆலோசனை சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அப்படி புத்தி சொன்னால், அவர்கள் குழந்தைகளாக இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியைப் பெறாதவர்களாய் இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றால், நீங்கள் பெற்ற அபிஷேகமே உங்களுக்குப் போதிக்கும். அல்லேலூயா. ஆவியானவர் உள்ளே இருக்கிற போதகர். நான் வெளியே இருக்கிற போதகர். அவர் பேசுவார். நீ போகிற போக்குச் சரியில்லை, உன் வாழ்க்கை வார்த்தையை விட்டு விலகியிருக்கிறது, நீ மாம்சத்தின்படி போகிறாய், நீ திருந்தவேண்டும் என்று அவர் பேசுவார். பரிசுத்த ஆவியைப் பெறாதவர்களுக்குத்தான் ஆலோசனை தேவை. குழந்தையாய் இருக்கிறவர்களுக்குத்தான் ஆலோசனை தேவை. நாம் முதிர்ச்சியடைந்தால் கர்த்தர் நம்மைப் பார்த்து சந்தோஷப்படுவார். “நீ கொஞ்சத்திலே உண்மையாய் இருந்தால் உன்னை அநேகத்தின்மேல் அதிகாரியாக்குவேன்” என்று சொல்லுவார். அல்லேலூயா. “என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே நீங்கள் எல்லாரும் வாருங்கள்” என்று சொல்லுவார்.

எத்தனைப்பேர் அப்படிக் கேட்க விரும்புகிறோம்? அதற்குத்தான் இந்த வார்த்தையை நாம் போதிக்கிறோம்.

இங்கே நாம் பார்க்கும்போது, இரண்டு பாளையங்கள் **(Two Camps)** இருக்கிறது. ஒன்று காயீனுடையது. மற்றொன்று ஆதாமுடையது. சேத்தின் சந்ததி. இவர்கள்போய் அவர்களோடு கலக்கும்போது பரிசுத்த வித்து கலப்படமானது. கூட்டற்குறியையும் **(Plus)**, கழித்தற்குறியையும் **(Minus)** பெருக்கும்போது கழித்தற்குறிதான் வரும். அதனால், இவர்கள் எவ்வளவுதான் தேவகுமாரர்களாய் இருந்தாலும், மனுஷகுமாரத்திகளுடன் கலக்கும்போது, கலப்படமான **(Hybrid)** சந்ததிதான் வரும். இதனால் கர்த்தர் அவர்களை அழிக்கவேண்டும் என்று நினைத்தார். மனுஷனை உண்டாக்கினதற்காக அவர் மனஸ்தாபப்பட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நாலாம் அதிகாரத்திலே, "மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனோஸ் பிறக்கும்போது, மனுஷர் என்று சொன்னால் அது காயீன் சந்ததியாரைக் குறிக்கிறது. தேவகுமாரர்கள் என்று சொன்னால், அது ஆதாமின் சந்ததி. "மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்" என்று சொன்னால், அவர்களுக்குக் கர்த்தருடைய நாமம் என்றால் என்னவென்றே தெரியாது. இன்றைக்கு ஸ்தாபன மக்களுக்குக் **(Denomination People)** கர்த்தருடைய நாமம் என்றால் என்னவென்றே தெரியாது. அது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியா அல்லது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவா என்று அவர்களுக்குத் தெரியாது. அந்த நாமம் எங்கே இருக்கிறது? அந்த ஆட்டுக்குட்டியில் **(Lamb)** இருக்கிறது. யார் கொண்டுவந்த ஆட்டுக்குட்டி? ஆபேல் கொண்டுவந்த ஆட்டுக்குட்டி. அல்லேலூயா. அந்த ஆட்டுக்குட்டி எதைக்குறிக்கிறது? கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது. அல்லேலூயா. ஆபேல் ஒரு அடையாளமாய்க் கொண்டுவந்தான். உண்மையான ஆட்டுக்குட்டி இயேசுகிறிஸ்து. கர்த்தர் தம்முடைய நாமத்தைக் குமாரனில் வைத்திருக்கிறார். அவருடைய பெயர் என்ன? கர்த்தராகிய இயேசுகிறிஸ்து **(Lord Jesus Christ)**. அல்லேலூயா.

அந்த மனுஷகுமாரர்கள், கர்த்தருடைய நாமம் என்னவென்றுத் தெரியாமலேயேத் தொழுதுகொண்டு, பெரிய ஸ்தாபனத்தை **(Organisation)** ஏற்படுத்திவிட்டார்கள். அதைப்போலவே, இன்றைக்கும் கர்த்தருடைய நாமம் என்னவென்றுத் தெரியாமலேயே, பெரிய பெரிய ஸ்தாபனங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சிலோன் பெந்தெகொஸ்தே **(TPM or CPM)** என்பது ஒரு பெரிய ஸ்தாபனம். மிகவும் கண்டிப்பான ஸ்தாபனம். அங்கே திருத்தவ **(Trinity)** உபதேசம்தான் இருக்கிறது. **AG** என்ற ஸ்தாபனத்திலும் திருத்துவம்தான். **CSI** யிலும் திருத்துவம்தான். உலகத்திலேயே பெரிய ஸ்தாபனம் ரோமன் கத்தோலிக்க **(Roman Catholics)** மார்க்கம். அங்கேயும் திருத்துவம்தான். எல்லா ஸ்தாபனங்களுக்கும் ஒரே பிரமாணம். ஆனால் ஆதாம் ஒரே தேவனை விசுவாசிக்கிறான். அல்லேலூயா. தேவகுமாரர்கள் ஒரே தேவனை விசுவாசிக்கிறார்கள். அவருடைய நாமம் என்னதென்று அறிந்திருக்கிறார்கள். ஆமென்.

சேத் சந்ததியார் மிகவும் தாழ்மையான மக்கள். அவர்கள் சாதுவானவர்கள். ஆனால் காயீன் சந்ததியார் கலையில் வல்லவர்கள் **(Architects)**. பெரிய பெரிய கட்டடங்களைக் கட்டினார்கள். உலோகங்களை பயன்படுத்த அறிந்திருந்தார்கள். பலதார விவாகங்களை **(Polygamy)** செய்துகொண்டார்கள். அவர்கள் கொலைகாரர்களாகவும் **(Murderers)** இருந்தார்கள். பாவம் பெருகினது. இந்த ஜனங்கள் அங்கேபோய் கலந்தால் என்ன ஆகும்? எல்லாமே கெட்டுப்போனது. அதைத்தான் நாம் நாலாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

**ஆதியாகமம் 6: 1**

1. மனுஷர் பூமியில் பெருகத் துவக்கி, அவர்களுக்குக் குமாரத்திகள் பிறந்தபோது:

**"And it came to pass"** என்று ஆங்கிலத்தில் வாசிக்கிறோம். அதில் இரண்டாயிரம் வருஷம் அடங்கியிருக்கிறது. இரண்டாயிரம் வருஷ முடிவிலே என்ன நடக்கிறதென்பதைத்தான் ஆறாம் அதிகாரத்திலே வாசிக்கிறோம். ஆதாமில் இருந்து இரண்டாயிரம் வருஷம் **(2000 Years)**. இயேசுகிறிஸ்து பிறந்ததிலிருந்து இரண்டாயிரம் வருஷத்தில் இப்பொழுது நாம் இருக்கிறோம். அங்கே இரண்டாயிரம் வருஷங்கள் **"And it came to pass"** என்ற சிரிய வரியில் அடங்கியிருக்கிறது. அங்கே மக்கள் தொகை பெருகினது. பெண்கள் அதிகமாகப் பிறந்தார்கள் **(More women)**. தேவகுமாரர்கள் மனுஷகுமாரத்திகளை விவாகம்செய்யும்போது அவர்கள் விழுந்துபோனார்கள் **(The Sons of God were in fallen condition)**. விவாகம் **(Marriage)**, விவாகரத்து **(Divorce)**, வேசித்தனம் **(Adultery)** போன்ற எல்லா காரியங்களும் நடந்தது. இவ்விதமாக, எல்லாமே மோசமாக மாறிவிட்டது. இன்றைக்கும் உலகம் அவ்விதமாகத்தான் இருக்கிறது. இவ்விதமான ஒரு உலகம்தான் நோவா காலத்தில் இருந்தது. அப்பொழுது கர்த்தர் என்ன சொல்லுகிறார்?

**ஆதியாகமம் 6: 3**

3. அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றென்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார்.

இரண்டாயிரம் வருஷங்கள் ஆகும்போது, ஆண்டவர் பார்க்கிறார். இன்னும் நூற்றிருபது வருஷம்தான் இருக்கிறது. "என் ஆவி மனுஷனோடே என்றைக்கும் போராடுவதில்லை" என்று சொன்னார். கீழ்ப்படியாத ஆத்துமாக்களோடு, பரிசுத்த ஆவியானவர், போதகர் **(Pastor)** மூலமாகப் போராடுகிறார். ஏன் அவருக்கு அந்தப் போராட்டத்தைக் கொடுக்கவேண்டும்? இது கர்த்தருக்குப் பிரியமா? நாம் இப்படிப் போனால் போதகர் சந்தோஷப்படுவாரா என்று, போதகருக்கும் ஒரு பயம் வேண்டும். கர்த்தருக்கும் பயப்படவேண்டும். போதகருக்கும் பயப்படவேண்டும். நாம் இப்படி செய்தால், போதகர் அதைக் கேள்விபட்டால், அவர் அதில் விருப்பப்படுவாரா என்று சிந்திக்கவேண்டும். போதகருக்கு பயம் இருந்தால், நீங்கள் அதைச் செய்யமாட்டீர்கள். போதகருக்கு பயம் இல்லையென்றால், அவர் சொல்லுவதைச் சொல்லட்டும், நாம் வேண்டுமென்றே செய்வோம் என்று இருப்பீர்கள். பார்த்தீர்களா?

தேவபயம் இல்லை. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கும் பயந்தார்கள், மோசேக்கும் பயந்தார்கள் என்று வேதத்தில் எழுதியிருக்கிறது.

நாம் செய்கிற காரியம் நம்முடைய சபை ஊழியத்திற்கு ஒத்துவருமா, நாம் கேட்கிற செய்திக்கு ஒத்துவருமா என்று அதையும் நாம் யோசிக்கவேண்டும். உங்கள் இஷ்டம்போல போவதற்கு நாம் அவ்விதமான ஊழியத்தைச் செய்யவில்லை. இங்கே மனுஷகுமாரனுடைய ஊழியம் மறுபடியும் வந்திருக்கிறது. அல்லேலூயா. நாம் மனுஷகுமாரனுடைய மாறாத சரீர வார்த்தையினால் போஷிக்கப்படுகிறோம் **(We are feeding on the unfailing Body Word of the Son of Man)**. ஆமென். நம்முடைய செய்தி மேலான செய்தி. அதற்கு அதிக கட்டுப்பாடு **(discipline)** உண்டு.

இப்பொழுது பாருங்கள், ஆண்டவர் இந்த ஜனங்களைப் பார்க்கும்போது, மாம்சமான யாவரும் தங்கள் வழிகளைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள். தங்களுடைய மனம்போல போகிறது, தங்களுடைய காரியங்களை அவர்களே கையாளுவது. கர்த்தர் என்ன சொல்லுகிறார், தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறது என்று அறியாதபடி, அவர்களே ஈடுபட்டுக் காரியத்தைச் சாதிக்கலாம் என்று சொல்லி, மாம்சத்தின்படி போய், அவர்களே திட்டம்போட்டு, அவர்களே செயல்படுகிற இவ்விதமான ஒரு காலத்தில்தான் நாம் இருக்கிறோம். லவோதிக்கேயா **(Laodicea)** என்றால் என்ன அர்த்தம்? ஜனங்களின் உரிமை **(People's Right)**. இப்பொழுது ஜனங்கள் அதைத்தான் சொல்லுகிறார்கள். சோதோமின் பாவத்தில் **(Gay People)** இருக்கிறவர்கள், "எங்களுக்கும் சுதந்திரம் இருக்கிறது, ஏன் எங்களைத் தடை செய்கிறீகள்?" என்று சொல்லுகிறார்கள். அதைப்போலத்தான் சிலர், நாங்கள் எங்கள் இஷ்டப்படி போவோம், நீங்கள் எப்படி தடைசெய்யலாம்? என்று கேட்கிறார்கள். இது அவ்வளவு மோசமான காலம்.

நாம் கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறது **(What the Word of God says)** என்பதைப் பார்க்கவேண்டும். நீங்களும் அதைத்தான் பார்க்கவேண்டும். நானும் அதைத்தான் பார்க்கவேண்டும். எல்லாரும் வார்த்தையைத்தான் பார்க்கவேண்டும். தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறதோ அதற்கு உடனே நாம் கீழ்ப்படியவேண்டும். கீழ்ப்படிய முடியவில்லை என்றால், "ஆண்டவரே, மாம்சம் உம்முடைய வார்த்தைக்கு விரோதமாக இருக்கிறது, அதையெல்லாம் என்னைவிட்டு எடுத்துப்போடும், வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் இருந்தால் அதை எடுத்துப்போடும் ஆண்டவரே" என்று சொல்லி ஜெபிப்பதுதான் பரிசுத்த ஆவியைப் பெற்ற மனுஷன். அல்லது அவன் மாம்சத்தின்படி நடக்கிறவனாக இருக்கிறான். கர்த்தர் பார்த்தார், இனிமேல் இவர்களை விட்டுவைக்கக்கூடாது, இவர்கள் இருக்கப்போகிறது நூற்றிருபது வருஷம் என்று சொல்லி, இரண்டாயிரம் வருஷம் தாண்டினபின்பு, அவர் கால வரம்பைக் **(Time Limit)** குறிக்கிறார். அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார்.

ஆதாம் தொளாயிரத்து முப்பது வருஷம் உயிரோடிருந்தான். உலகத்திலேயே அதிக வருஷம் உயிரோடிருந்தது மெத்துசலா **(Methuselah)**. அவன் தொளாயிரத்து அறுபத்தொன்பது வருஷம் **(969 years)** உயிரோடிருந்தான். இவ்வளவு காலம் உயிரோடிருந்தார்கள். நோவாகூட அறுநூறு வயதாக இருக்கும்போதுதான் ஜலப்பிரளயம் வந்தது. அதன்பின்பு

அவன் அநேக வருடங்கள் உயிரோடிருந்தான். இப்படி அவர்களுக்கெல்லாம் ஆயுசு நாட்கள் மிக அதிகமாக இருந்தது. இப்பொழுது ஆண்டவர் ஒரு வரம்பைக் குறித்துவிட்டார். அவன் இருக்கப்போகிறது நூற்றிருபது வருஷம் தான்.

அவர்கள் என்ன செய்தார்கள்? மரங்களை வெட்டினார்கள். காடுகளை அழித்து வீடுகளைக் கட்டினார்கள். தொழிற்சாலைகள் **(Industries)** அங்கே ஏற்பட்டது. தண்ணீர், காற்று, சமுத்திரம் எல்லாவற்றையும் மாசுபடுத்தினார்கள். இரசாயனக் கழிவுகளைக் **(Chemical Waste)** கொண்டுபோய் சமுத்திரத்திலும் நீர்நிலைகளிலும் போடும்போது, எல்லாமே அங்கே கெட்டுப்போய்விட்டது. விஞ்ஞானப்பூர்வமான வாழ்க்கை **(Scientific Living)** அங்கே வந்தது. விஞ்ஞான உலகத்துக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். ஏதேனில் இருக்கும்பொழுது விசுவாச உலகத்தில் **(Faith Civilisation)** இருந்தார்கள். இப்பொழுது இரண்டாயிரம் வருஷம் வரும்போது, விஞ்ஞானக் காலத்துக்கு **(Scientific Age)** வந்துவிட்டார்கள். தொழில் சார்ந்த காலத்துக்கு **(Industrial Age)** வந்துவிட்டார்கள். தகவல்தொடர்புள்ள காலத்துக்கு **(Information Age)** வந்துவிட்டார்கள். கணினிமயமானக் காலத்தில் **(Computer Age)** வந்துவிட்டார்கள். அணு வல்லமையைப் **(Atomic Power)** பயன்படுத்த அறிந்துகொண்டார்கள். இவ்விதமான ஒரு விஞ்ஞான காலத்தில் இருக்கும்போதுதான் கர்த்தர் நோவா என்ற தீர்க்கதரிசியை அனுப்புகிறார். ஆமென்.

**ஆதியாகமம் 6: 4**

4. அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்; பின்பு தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்ற போது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்.

அப்பொழுது இராட்சதர்கள் இருந்தார்கள் என்று சொல்லும்போது, கோலியாத்தைப்போல பெரிய உருவம் கொண்டவர்களும், பார்ப்பதற்கு பயங்கரமானவர்களும் இல்லை. தமிழ் புராணங்களில் இராவனன் என்று சொல்லுகிறார்கள். அதைப்போல இராட்சனா? இல்லை. அறிவில் இராட்சதர்களாய் **(Intellectual Giants)** இருந்தார்கள். அதிக அறிவை உடையவர்களாய் இருந்தார்கள். படிப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து மனுஷனுடைய ஞானத்தைப் புகழவேண்டிய காலம். ஞானம் அவசியம்தான். படிப்பும் அவசியம்தான். ஆனால், அதைவிட தேவ ஞானம் மேலானது. அல்லேலூயா. உலகப் படிப்பினால் நமக்கு நல்ல வேலைக் கிடைக்கலாம், உலக வாழ்க்கை நமக்கு இலகுவாக இருக்கலாம். ஆனால் தேவ ஞானம் நம்மை மேலே கொண்டுசெல்லுகிறது. அல்லேலூயா. அன்றைக்கு அறிவில் இராட்சதர்களாய் மாறினார்கள். இன்றைக்கு அநேகர் விஞ்ஞானிகளாக **(Scientists)** மாற விரும்புகிறார்கள். பெரிய பதவியில் வரவேண்டும், கின்னஸ் சாதனைச் **(Guinness Record)** செய்யவேண்டும் என்று நினைக்கிறார்கள். அங்கே அறிவாளிகள் தோன்றினார்கள். விஞ்ஞானிகள் தோன்றினார்கள். பிரபலமானவர்கள் தோன்றினார்கள். மனுஷனுடைய அக்கிரமம் பெருகினது.

**ஆதியாகமம் 6: 5**

5. மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,

மனுஷனுடைய நினைவுகள் எல்லாம் நித்தமும் பொல்லாததாக இருந்தது. ஒரு மனுஷன் எப்படி இருக்கிறான் என்பது அவனுடைய நினைவுகளைப் **(thoughts)** பொருத்தது. அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்; என்று நீதிமொழிகள் 23:7ல் வாசிக்கிறோம். அவன் நினைவுகள் நல்ல மாதிரி இருந்தால் அவன் நல்ல மனுஷன். நினைவுகள் மோசமாக இருந்தால், பேச்சும் மோசமாக இருக்கும், செயல்பாடும் அதைவிட மோசமாக இருக்கும். நினைவுகள் சரியாக இருந்தால், பேச்சும் சரியாக இருக்கும், செயல்பாடுகளும் சரியாக இருக்கும். அல்லேலூயா. அந்த இருதயத்திலிருந்துதான் அது ஆரம்பிக்கிறது. நமக்குப் புது இருதயம் வேண்டும். தேவன் நம்முடைய இருதயத்தில் அவருடைய ஆவியைத் தந்தாரென்றால், நம்முடைய பழைய சுபாவம் மாறி புதிய சுபாவத்தைப் பெறுகிறோம். இயேசுகிறிஸ்துவின் சுபாவத்தைப் பெறுகிறோம். அல்லேலூயா. அன்றைக்கு அந்த ஜனங்களுடைய இருதயத்தின் நினைவுகள் மோசமாக இருந்தது. பெண்களை ஆபாசமாக விளம்பரங்களில் காண்பித்து வியாபாரத்தைப் பெருக்குகிறார்கள். இன்னும் பணம் சம்பாதிக்கவும், உல்லாசமாக இருக்கவும், இவ்விதமாக மனுஷர்கள் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டார்கள். அக்கிரமம் பூமியிலே பெருகினது. மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகளெல்லாம் நித்தமும் பொல்லாததாக இருந்ததால் கர்த்தர் மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார்.

**ஆதியாகமம் 6: 6**

6. தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது.

அவர்களுடைய காரியங்கள் எல்லாம் அவர்களுக்கு சந்தோஷமாக இருந்தது. ஆனால் கர்த்தருக்கு அது விசனமாயிருந்தது. அதனால், நாம் எப்படி நினைக்கிறோம் **(How do we feel)** என்பது முக்கியமல்ல. கர்த்தர் நம்மைக் குறித்து என்ன நினைப்பார் **(How the Lord feels about us)** என்பதுதான் முக்கியம். அல்லேலூயா. அறிவுப்பூர்வமான வாழ்க்கை ஏற்பட்டு அவர்கள் தேவனுடைய வார்த்தையை விட தங்களுடைய சொந்த கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் **(Exalting their own ideas above the Word of God)**. தேவனுடைய வார்த்தையைவிட உங்களுடைய சொந்த கருத்துக்களுக்கு முக்கியத்துவும் உண்டா? போதகரிடம் வந்து சொன்னால், அவர் அதை அங்கீகாரம்பண்ணுவாரா? நிச்சயமாக அங்கீகாரம்பண்ணமாட்டார். தேவனுடைய வார்த்தையைத்தான் நாம் உயர்த்தவேண்டும். அல்லேலூயா. நம்முடைய சொந்த கருத்துக்கள் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக இருந்தால், நாம் அதை விட்டுவிடவேண்டும். நாம் மனந்திரும்பவேண்டும். நோவா காலத்திலே, அவர்கள் மதம் **(Religion)**, அரசியல் **(Politics)**, கல்வி **(Education)** போன்ற எல்லாவற்றையும் அதிகமாகக் கொண்டுவந்து, தேவனுடைய வார்த்தையை புறம்பே தள்ளிவிட்டார்கள். தேவனுடைய வார்த்தையை புறம்பே தள்ளும்போது, அது அவருடைய

பார்வைக்கு விசனமாக இருந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால், கர்த்தர் என்ன தீர்மானம்பண்ணினார்?

<u>**ஆதியாகமம் 6: 7**</u>

7. அப்பொழுது கர்த்தர்: நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார்.

அவர்களை நான் உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்ற வார்த்தை மறுபடியும் **(Repeated)** அங்கே வருகிறது. ஆண்டவருக்கு எவ்வளவு மனஸ்தாபம் இருந்தால் அந்த வார்த்தை மறுபடியும் வரும் என்று பாருங்கள்! நான் உண்டாக்கின மனுஷனை இந்தப் பூமியில் இருந்து அழித்துப்போடுவேன் என்று சொன்னார் **(I will destroy man whom I have created from the face of the earth)**.

மற்றவர்களுக்கு இடறல் உண்டாகும்படியானத் தவறைச் செய்கிறவர்களை, ஆலோசனைக் கொடுத்தும் திருந்தாதவர்களை சபையைவிட்டு அப்புறப்படுத்துவதுதான் கடைசி முடிவு. அதைப்போலத்தான் ஆண்டவரும் செய்கிறார். அவர் இந்தப் பூமியைவிட்டு அவர்களை அப்புறப்படுத்துகிறார். அவர்களை நிக்கிரகம்பண்ணுவேன் என்று கர்த்தர் தீர்மானம் செய்தார். முதலாவது, மனுஷனை உண்டாக்கினதற்காக அவர் சந்தோஷப்பட்டார். கடந்த வாரத்தில் அதைத் தியானித்தோம். முதலாம் நாள், இரண்டாம் நாள் என்று எல்லாவற்றையும் உண்டாக்கி, கடைசியாக ஆறாம் நாள் மனுஷனை உண்டாக்கும்போது, அவர் மிகவும் நன்றாக இருந்தது **(It is very good)** என்று சொன்னார். அவருக்கு அதிக திருப்தியாக இருந்தது. அதனால், அவர் இளைப்பாற சென்றுவிட்டார். ஏழாம் நாளிலே அவர் இளைப்பாறினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நல்ல சந்தோஷமாக இருந்தால் நமக்கு தூக்கம் நன்றாக வரும். நமக்கு ஒரு திருப்தி **(Satisfaction)** இருந்தால் தூக்கம் நன்றாக வரும். மனதிலே குழப்பம் இருந்தால் தூக்கம் வராது. அதைப்போல, ஆண்டவர் எல்லாவற்றையும் உண்டாக்கும்போது, அது எல்லாமே நன்றாக இருந்தது. எல்லாம் ஒழுங்கும் கிரமமாக இருந்தது. எல்லா சிருஷ்டிகளும் அதினதின் ஸ்தானத்திலே இருந்தது. ஒன்றோடொன்று இசைவாக இருந்தது **(Harmony with each other)**. அதனால் ஆண்டவருக்கு திருப்தி ஏற்பட்டது. ஆனால் இப்பொழுது, அவர் எல்லாவற்றையும் உண்டாக்கி இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பின்பு என்ன வாசிக்கிறோம்? அவர் அதற்காக மனஸ்தாபப்பட்டார் என்று வாசிக்கிறோம்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பாக அவர்கள் விசுவாச உலகத்தில் **(Faith Civilisation)** இருந்தார்கள். காற்றைப் பார்த்து, வீசாதே என்றால் அது வீசாது. சூரியனைப் பார்த்து, இன்னும் கொஞ்சம் பிரகாசமாக மாறு என்று சொன்னால் அது அப்படி மாறும். அவர்கள் சொன்னபடியெல்லாம் நடக்கும். உலகமே குளிர்சாதன வசதி செய்ததுபோல இருந்தது. நாம் வெயிலினால் மிகவும் கஷ்டப்படுகிறோம். அன்றைக்கு அப்படி கிடையாது. ஆதாமின் வார்த்தைக்கு எல்லாமே கீழ்ப்படிந்திருந்தது. இவ்விதமான ஒரு விசுவாச நிலையை

விட்டு, அவன் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தில் பங்குபெற்றதனால், அறிவின் உலகத்திற்கு வந்தான்.

அறிவியல் உலகத்திற்கு **(Science Civilisation)** வரும்போது, தொழிற்புரட்சி **(Industrial Revolution)** ஏற்பட்டது. மனுஷன் பூமியைத் தோண்டி தோண்டி, அதிலிருக்கிற உலோகங்கள், கனிமங்கள், மூலப்பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்து, இயந்திரங்களைச் செய்வதற்கும், யுத்த ஆயுதங்களைச் செய்வதற்கும், தொழிற்கருவிகள் செய்வதற்கும் பயன்படுத்தி, தடிப்பாக இருந்த பூமியின் அஸ்திபாரத்தை மெல்லியதாக மாற்றிவிட்டான். இன்றைக்கு பூமியின் அஸ்திபாரம் மெலிதாக மாறினதால்தான் பூமியதிர்ச்சி ஏற்படுகிறது. இவ்விதமாகச் செய்யும்போது, கர்த்தருடைய மனதுக்கு அது விசனமாக இருந்தது என்று பார்க்கிறோம். அங்கே, விஞ்ஞானம் **(Science)** பெருகினது, அரசியல் **(Politics)** உருவானது, கல்வி **(Education)** வளர்ந்தது, மதங்கள் **(Religion)** தோன்றின, மனுஷனுடைய ஒழுக்கம் கெட்டுப்போனது **(Moral Life decayed)**. நிலைமை மிக மோசமாக மாறியது. இவைகளை முதல் ஏழு வசனங்களில் வாசிக்கிறோம்.

எட்டாம வசனத்திலிருந்து மாற்றம் ஏற்படுகிறது. எட்டாம் வசனத்திலே, கர்த்தர் ஒரு மனுஷனைக் கண்டுபிடிக்கிறார்.

**ஆதியாகமம் 6: 8**

8. நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது.

நோவாவை ஆண்டவர் கண்டுபிடிக்கிறார். அவன் ஒரு சாதாரண மனுஷன் தான். அவன் ஒரு விசேஷித்த மனுஷன் கிடையாது. நம்மைப் போல ஒரு சாதாரண மனுஷன் தான். ஆண்டவர் அவனைக் கண்டுபிடித்து அவனுக்கு ஒரு செய்தியைக் கொடுக்கிறார். அல்லேலூயா. அந்தச் செய்தி என்னவென்றால், கிருபையின் செய்தி **(Message of Grace)**. அது மீட்பின் செய்தி **(Message of Redemption)**. அது நியாயத்தீர்ப்பின் செய்தி **(Message of Judgment)**. நோவா கொடுக்கிற செய்தியில் கீழ்ப்படியாதவர்களுக்கு நியாயத்தீர்ப்பு இருக்கிறது. கீழ்ப்படிகிறவர்களுக்கு மீட்பு இருக்கிறது. அவர்கள் தப்பித்துக்கொள்வதற்கு வழி இருக்கிறது. அல்லேலூயா. இந்த நேரத்திற்குரிய செய்தியில் இரண்டும் இருக்கிறது.

இயேசுகிறிஸ்து உலகத்தில் பிறந்து இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பிறகு, இந்தக் கடைசி காலத்திலே, கர்த்தர் ஒரு மனுஷனைத் தேடி கண்டுபிடித்தார். அவர்தான் ஏழாம் தூதனாகிய சகோ. பிரன்ஹாம் **(William Marrion Branham)**. அல்லேலூயா. அவருக்கு ஆண்டவர் ஒரு செய்தியைக் கொடுத்தார். அந்தச் செய்தி உங்களுக்கு வந்திருக்கிறது. அது உங்களுக்குக் கிருபையின் செய்தி. அல்லேலூயா. அதைப் புறக்கணிக்கிற உலகத்தின் மக்களுக்கோ அது நியாயத்தீர்ப்பின் செய்தி. ஒரே செய்திதான் கிருபையாகவும் இருக்கிறது. நியாயத்தீர்ப்பாகவும் இருக்கிறது. நீங்கள் கீழ்ப்படிந்தால் கிருபை. கீழ்ப்படியாவிட்டால் நியாயத்தீர்ப்பு.

நான் எங்கே சென்றாலும் இந்தச் செய்தியைத்தான் பிரசங்கம்பண்ணுகிறேன். சாராளைக் காண்பித்து, அதற்கு எதிர்மறையாக ஆகாரையும், லோத்தின் மனைவியையும் காண்பிப்பேன். நீங்கள் எங்கே அடையாளப்படுத்துகிறீர்கள் என்று பாருங்கள். எந்த

இடத்திற்குச் சென்றாலும் சத்தியத்தைச் சொல்லாமல் என்னால் இருக்கமுடியாது. அந்த ஜனங்களுக்கு சரியாகச் சுட்டிக் காட்டவேண்டும் என்று என் மனதில் ஆண்டவர் அவ்விதமான ஒரு பாரத்தைக் கொடுத்துச் சொல்லும்போது, அதற்குக் கீழ்ப்படியாத ஆத்துமாக்களுக்கு என்ன வரும்? நியாயத்தீர்ப்பு தான் வரும். ஆனால், நாம் களிகூருகிறோம். நாம் சாராளாய் இருக்கிறோம். அல்லேலூயா. வேதத்தில் கீழ்ப்படியாத ஆத்துமாக்களையும் காண்கிறோம். கீழ்ப்படிகிற ஆத்துமாக்களையும் காண்கிறோம். வசனத்தைக் கேட்டும் கீழ்ப்படியாத ஆத்துமாக்களுக்கு நியாயத்தீர்ப்பைத் தவிர வேறே ஒன்றும் இல்லை. நோவாவின் செய்திக்குக் கீழ்ப்படியாத ஆத்துமாக்கள் ஜலப்பிரளயத்தில் அழிந்துபோனார்கள். ஜலப்பிரளயத்தில் அழிந்துபோனதோடு முடிந்ததா? அவர்கள் பாதாளத்தில் அல்லவா இருக்கிறார்கள். இரண்டாயிரம் வருஷம் பாதாளத்தில் இருந்தார்கள். இயேசுகிறிஸ்து போய், நோவா காலத்தில் கீழ்ப்படியாத ஆத்துமாக்களுக்கு சாட்சியாக அறிவித்தார் என்று எழுதியிருக்கிறது. இன்றைக்கும் அவர்கள் பாதாளத்தில்தானே இருக்கிறார்கள்! கடைசி உயிர்த்தெழுதலில் வந்து நின்று, பின்பு அக்கினிக்கடலுக்குப் போவார்கள்.

ஒரு மனுஷன் கர்த்தருடைய வார்த்தைக்குத் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தும்போது, அதனுடைய விளைவு எவ்வளவு பயங்கரமாக இருக்கிறதென்று பாருங்கள். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தால் அந்த ஆசீர்வாதங்கள் எத்தனை மடங்கு அதிகமாகக் கிடைக்கிறது! அற்பகால ஒரு வாழ்க்கையை ஆண்டவர் நமக்குத் தந்து, இந்த நேரத்திற்குரிய செய்தியை ஒரு சாதாரண போதகர் மூலமாக நமக்குச் சொல்லும்போது, அது ஒரு மனுஷனுடைய வார்த்தை என்று சொல்லி புறக்கணிக்கிறவர்களின் முடிவு என்ன என்று பாருங்கள். அந்த வார்த்தையை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் இருக்கிறது. நித்திய ஆசீர்வாதங்கள் **(Eternal Blessing)** இருக்கிறது. அல்லேலூயா. வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு முழு உலகமே சொந்தமாக மாறப்போகிறது. இதெல்லாம் விட்டு விட்டு, புத்தியில்லாதவர்கள் என்ன செய்கிறார்களென்றால், இந்த அற்பகால உலக சந்தோஷத்திற்காக, பாவ சந்தோஷத்திற்காக, நித்தியமான தேவனுடைய வார்த்தையைப் புறக்கணிக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை பரிதபிக்கப்படத்தக்கது. நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வெளிப்படும் காலத்திலும் நடக்கும். ஆமென்.

விசுவாச உலகத்தில் இருந்து, அறிவியில் உலகத்திற்கு வரும்போது, ஜனங்களின் அறிவுப் பெருகப் பெருக, ஐசுவரியம் பெருகப் பெருக அவர்கள் கெட்டுப்போனார்கள். பிள்ளைகள் நன்றாகப் படித்தால், பெற்றோர்களுக்குப் பெருமை வந்துவிடும். பிள்ளைகள் நன்றாகச் சம்பாதித்தால் பெற்றோர்களுக்குப் பெருமை வந்து, வீண் சண்டைக்குப் போவார்கள். ஆண்டவர் பணத்தைக் கொடுத்தால், பிள்ளைகள் நன்றாகப் படித்தால் சந்தோஷப்படுங்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள். தாழ்மையாக இருங்கள். அப்பொழுது கர்த்தர் இன்னும் அதிகமான கிருபை தருவார். அழிவுக்கு முன்னானது அகந்தை. விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறியும் அறிவைக் குறித்தே அல்லாமல், வேறொன்றையும் குறித்து நாம் மேன்மைபாராட்டக்கூடாது. அல்லேலூயா.

ஆதியாகமம் 1: 26, 27ல் மனுஷனை உண்டாக்கினதற்காக தேவன் சந்தோஷப்பட்டார். ஆனால், 6ம் அதிகாரம் வரும்போது, இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பின்பு, அவர் மனஸ்தாபப்பட்டார் என்று எழுதியிருக்கிறது. உலகமானது, விஞ்ஞான உலகமாக மாறும்போது, அந்த நேரத்தில் கர்த்தர் ஒரு தீர்க்கதரிசி மூலமாக ஒரு செய்தியைக்

கொண்டுவருகிறார் **(There is a Prophet laying there, to bring a Message at the end of Scientific Civilisation)**. ஆமென். நோவா ஒரு சாதாரண மனுஷன். முக்கியத்துவம் இல்லாத **(Insignificant)** மனுஷன். அன்றைக்கு, பெரியப் பெரிய அறிவாளிகளெல்லாம் **(Intellectual Giants)** இருந்தார்கள். பெரியப் பெரிய விஞ்ஞானிகள் இருந்தார்கள். பெரிய ஐசுவரியவான்கள் இருந்தார்கள். அவர்களையெல்லாம் விட்டு விட்டு ஆண்டவர் ஒரு சாதாரண மனுஷனைத் தெரிந்துகொண்டார். அல்லேலூயா.

சகோ. பிரன்ஹாம் ஏழாம் வகுப்புத்தான் **(Seventh Grade)** படித்தவர். அவர் தகப்பன் ஒரு காடுவெட்டி **(Wood-Cutter)**. அவருடைய தாயார் மிகவும் எளிமையானவர்கள். அவ்விதமான குடும்பத்தில் இருந்து கர்த்தர் சகோ. பிரன்ஹாமைத் தெரிந்துகொண்டார் என்றால், அது தேவனுடைய அநாதி தீர்மானம். அல்லேலூயா. அதுதான் தேவனுடைய மகத்துவம் **(Greatness of God)**.

உலகமெல்லாம் மாசுபட்டிருக்கிறது. எல்லாமே அருவருப்பாக மாறிவிட்டது. இவ்விதமான காலத்திலே நோவா கர்த்தருக்குப் பிரியமாக ஜீவிக்கிறான்.

**ஆதியாகமம் 6: 9**

9. நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்.

இதோ, தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே அவன் நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். ஆண்டவர் யோபைக் குறித்தும் அவ்விதமாகத்தான் சொல்லுகிறார். கர்த்தர் சாத்தானை நோக்கி: என் தாசனாகிய யோபுவின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போலப் பூமியில் ஒருவனும் இல்லை என்றார். இந்தப் பூமியிலேயே அவனைப்போல யாரும் இல்லை என்று சாத்தானிடத்தில் சொன்னார். அதைப்போலத்தான், கர்த்தர் இங்கே நோவாவைக் குறித்துச் சொல்லுகிறார். இந்தப் பூமியிலேயே அவனைப்போல யாரும் கிடையாது. அவனுக்குக் கர்த்தருடைய கண்களில் தயவு கிடைத்தது. அவன் நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். அவன் தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தான் **(Noah walked with God)**. ஆமென்.

இந்த உலகத்திலே, இயேசுகிறிஸ்து மாம்சத்தில் நம்மோடு இல்லை. அவர் ஆவியின் ரூபத்தில் **(Spirit Form)** இருக்கிறார். நாம் அந்த பரிசுத்த ஆவியானவரோடு ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். எத்தனைப்பேர் அப்படி இருக்கிறோம்? நாம் வெளிப்பாடுகளோடு ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். கர்த்தருடைய வார்த்தையோடு வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நமக்குக் கர்த்தருடைய வார்த்தையைப் பற்றிய சிந்தனையே **(thoughts)** வந்துகொண்டிருக்கிறது. வேதத்தைப்பற்றியே நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். நாம் இன்றைக்கு வெளிப்பாடுகளோடு, தேவனுடைய சிந்தையோடுகூட ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். அல்லேலூயா.

உலகத்தின் மக்களைப்போல, உலக சந்தோஷத்திலும், அவ்விதமான ஆர்ப்பாட்டத்திலும், கொண்டாட்டத்திலும் இல்லை. அதைவிட மேலான சந்தோஷத்தை ஆண்டவர் நமக்குத் தந்திருக்கிறார். அல்லேலூயா. நோவா தேவனோடு சஞ்சரித்தான். நாம் இன்றைக்கு வார்த்தையோடு சஞ்சரித்துக்கொண்டிருக்கிறோம். ஆமென். குமாரர்களையும் பெற்று, குடும்ப வாழ்க்கை செய்துகொண்டே அவன் ஜீவித்துக்கொண்டிருந்தான். ஆமென். அவன் ஒரு தீர்க்கதரிசி என்று சொல்லவில்லை. ஆனால், தேவனுடைய வார்த்தை அவனிடத்தில் வரும்போது, அவன் வார்த்தை தீர்க்கதரிசியாக **(Word Prophet)** மாறுகிறான். ஆமென். எத்தனையோ பேர் தீர்க்கதரிசனம் சொல்லலாம். ஆனால், அவர்கள் **"**வார்த்தை தீர்க்கதரிசி**"** இல்லை. அவர்கள் தீர்க்கதரிசி என்ற ஸ்தானத்திற்கு வரமுடியாது. ஆனால் நோவா ஒரு தீர்க்கதரிசி. ஏனென்றால், தேவனுடைய வார்த்தை அவனுக்கு வந்தது. அல்லேலூயா.

இப்பொழுது, 11ம் வசனம் முக்கியமான வசனம். அங்கேதான் எக்காளங்கள் வருகிறது.

**ஆதியாகமம் 6: 11**

11. பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது.

**(The earth also was corrupt before God, and the earth was filled with violence)**. இதிலே, இரண்டு காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. பூமியானது சீர்கெட்டதாயிருந்தது **(Corrupted)**. அதன்பின்பு, கொடுமையினால் நிறைந்திருந்தது **(Filled with Violence)**. இதிலே, ஏழு எக்காளங்கள் அடங்கியிருக்கிறது. இந்த ஒரே வசனத்திலே அடங்கியிருக்கிறது.

முதல் நாலு எக்காளங்கள் எதைக்குறிக்கிறது? உங்களுக்கு நாலு வாரங்களாய் பிரசங்கம்பண்ணிக்கொண்டிருக்கிறேன். முதல் நான்கு எக்காளங்களில், பூமி, சமுத்திரம், ஆறுகள், நீரூற்றுகள், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் பாதிக்கப்படுகிறது. அவைகளில் மூன்றில் ஒரு பங்கு சேதப்பட்டது. ஐந்தாம், ஆறாம், ஏழாம் எக்காளங்களில் பூமியில் குடியிருக்கிறவர்கள் பாதிக்கப்படுவதை வாசிக்கிறோம். இதோ, மூன்று ஐயோக்கள் **(Three Woes)** அங்கே வருகிறது. அதுதான் முதலாம் உலக யுத்தம், இரண்டாம் உலக யுத்தம், மூன்றாம் உலக யுத்தம். உலகத்தின் மக்கள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பூமி **(Habitation)** பாதிக்கப்படுகிறது. அதில் குடியிருக்கிற மனுஷர்களும் **(Inhabitants)** பாதிக்கப்படுகிறார்கள். அதைத்தான் நாம் ஏழு எக்காளங்களில் வாசிக்கிறோம்.

வெளிப்படுத்தல் 8: 7 – 13ம் வசனம் வரைக்கும் முதல் ஏழு எக்காளங்களைக் குறித்து நாம் வாசிக்கிறோம். 9ம் அதிகாரத்தில், முதல் பன்னிரண்டு வசனங்களில் ஐந்தாம் எக்காளத்தைப் பற்றி வாசிக்கிறோம். 13ம் வசனத்தில் இருந்து அந்த அதிகாரம் முடிய ஆறாம் எக்காளத்தை வாசிக்கிறோம். நாம் வாசிக்கக்கேட்டப் பகுதியில், வெளிப்படுத்தல் 11: 15 – 19 வரை ஏழாம் எக்காளத்தைக் குறித்து வாசிக்கிறோம்.

முதலாம் எக்காளத்தில், பூமியில் உள்ள மரங்களில் மூன்றிலொருபங்கும், பசும்புல்லெல்லாம் **(Trees & Grass)** எரிந்துபோயிற்று. இரண்டாம் எக்காளத்தில், சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாகிவிட்டது. சமுத்திரத்தில் இருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று. கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாகிவிட்டது. மூன்றாம் எக்காளத்தில், வானத்திலிருந்து எட்டி என்ற ஒரு பெரிய நட்சத்திரம், ஆறுகளில் மூன்றிலொருபங்கின்மேலும், நீரூற்றுகளிலும் விழுந்து, தண்ணீரில் மூன்றிலொருபங்கு கசப்பாயிற்று. அந்த கசப்பான தண்ணீரினால் மனுஷர்கள் அநேகர் செத்தார்கள். நல்லத் தண்ணீர் **(Fresh Water)** கெட்டுப்போனது. கடந்த வாரத்தில் அதைக்குறித்து நாம் விளக்கமாகப் பார்த்தோம். நாலாம் எக்காளம் ஊதும்போது, சூரியனில் மூன்றிலொருபங்கும், சந்திரனில் மூன்றிலொருபங்கும், நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது. அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு இருளடைந்தது. பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று, இரவிலும் அப்படியே ஆயிற்று. இங்கே வானமண்டலம் **(Space)** பாதிக்கப்படுவதை வாசிக்கிறோம். இயற்கை எப்படி பாதிக்கப்படுகிறது **(Natural Disturbances)** என்று பார்க்கிறோம். அதைத்தான் ஆதியாகமம் 6:11ல் முதல் பாகத்தில் வாசிக்கிறோம். பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது **(The earth was corrupted)**. முதல் நாலு எக்காளங்கள் அதில் அடங்கியிருக்கிறது. அதன்பின்பு அந்த வசனத்தில் என்ன வாசிக்கிறோம். பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. அங்கே பார்க்கும்போது, ஐந்தாம், ஆறாம் எக்காளம் வருகிறது.

<u>வெளிப்படுத்தல் **9: 1 - 3**</u>

1. ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன்; அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது.
2. அவன் பாதாளக்குழியைத் திறந்தான்; உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகைஎழும்பிற்று; அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டது.
3. அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தது; அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது.

ஐந்தாம் எக்காளம், முதலாம் உலக யுத்தத்தையும் **(I World War)** குறிக்கிறது, பாதாளக்குழி திறக்கப்பட்டு அசுத்த ஆவிகள் **(Evil Spirits)** உலகத்திற்குள் வருவதையும் குறிக்கிறது. அதைப்போலவே, ஆறாம் எக்காளம், இரண்டாம் உலக யுத்தத்தையும் **(II World War)** குறிக்கிறது, மத ஆவிகள் **(Religious Spirits)** உலகத்திற்குள் வருவதையும் குறிக்கிறது.

<u>வெளிப்படுத்தல் **9: 13 - 16**</u>

13. ஆறாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது தேவனுக்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து ஒரு சத்தந்தோன்றி,

14. எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி: ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு என்று சொல்லக்கேட்டேன்.

15. அப்பொழுது மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு ஒருமணிநேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்.

16. குதிரைச்சேனைகளாகிய இராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது; அவைகளின் தொகையைச் சொல்லக்கேட்டேன்.

ஹிட்லர் **(Hitler)**, எய்க்மேன் **(Eichmann)**, முசோலினி **(Mussolini)**, ஸ்டாலின் **(Stalin)** ஆகிய அந்த நான்கு தூதர்களை அவிழ்த்துவிடும்போது, இரண்டாம் உலக யுத்தம் அங்கே வந்தது. அடுத்த வசனத்திலே என்ன வாசிக்கிறோம்? குதிரைச்சேனைகளாகிய இராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது. இருபது கோடி பிசாசின் ஆவிகள் அங்கே வந்தது. ஒரு பகுதி உலகப்பிரகாரமான யுத்தம், இன்னொரு பகுதி, ஆவிக்குரிய பிரகாரமாய்ப் பார்க்கும்போது, அசுத்த ஆவிகள் அங்கே வருகிறது. இப்பொழுது நாம் இரண்டாம் உலக யுத்தம் முடிந்து, மூன்றாம் உலக யுத்தத்தை எதிர்நோக்கியிருக்கிறோம்.

<u>வெளிப்படுத்தல் **11: 15**</u>

15. ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.

இந்த வசனம் எதைக்குறிக்கிறது? ஆயிர வருட ஆளுகையைக் **(Ushering of Millennium)** குறிக்கிறது. அது, ஆயிர வருட ஆளுகை வரப்போகிறது என்ற அறிவிப்பாய் **(Announcement)** இருக்கிறது. ஏழாம் எக்காளம் ஆயிர வருட அரசாட்சியைக் குறிக்கிறது. அதை மட்டும் அது குறிக்கிறதா? இல்லை. அது மூன்றாம் உலக யுத்தத்தையும் **(III World War)** குறிக்கிறது.

<u>வெளிப்படுத்தல் **11: 18**</u>

18. ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது;**.......** பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது

பாருங்கள் அங்கே மூன்றாம் உலக யுத்தம் வருகிறது. ஆவிக்குரிய பிரகாரமாக பார்க்கும்போது, நமக்கு ஆயிரம் வருட ஆளுகை வரப்போகிறது. உலகத்தின் பக்கமாக பார்க்கும்போது, அது மூன்றாம் உலக யுத்தமாக இருக்கிறது. வானத்தின் மத்தியில் பறந்துவந்த அந்தத் தூதன் என்ன சொன்னான்? இனி பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ **(Woe, Woe, Woe)** என்று சொன்னான். மூன்று ஐயோக்கள். முதலாம் உலக யுத்தம், இரண்டாம் உலக யுத்தம், மூன்றாம் உலக யுத்தம்.

<u>வெளிப்படுத்தல் **8: 13**</u>

13. பின்பு, ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக்கண்டேன்: அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காளசத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டேன்.

மூன்றாம் உலக யுத்தம் ஏற்பட்டு, உலகமே முற்றிலும் அழிந்தால்தான் ஆயிர வருட ஆளுகை வரும். அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது; அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின (வெளிப்படுத்தல் **11: 19**). பெருங்கல்மழை என்பது அணு குண்டுகள் **(Atomic Bombs)** அங்கே விழுவதைக் குறிக்கிறது. அணு அக்கினியால் உலகம் முற்றிலுமாக அழிந்துபோகும் **(Total Annihilation)** .

பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. யுத்தங்கள், கொலைகள் எல்லாமே அதில் அடங்கியிருக்கிறது. முதலாவது, இயற்கை கெட்டுப்போகிறது. இரண்டாவது, பூமியில் உள்ள மனுஷர்கள் கெட்டுப்போகிறார்கள். முதல் நாலு எக்காளங்களில் இயற்கைக் கெட்டுப்போகிறது. மீதி மூன்று எக்காளங்கள், மனுஷர்மேல் வரும் கொடுமையாகிய யுத்தங்கள், கலவரங்கள், தீவிரவாதங்கள் போன்ற எல்லாவற்றையும் அது குறிக்கிறது.

முதலாவது, மனுஷன் சுற்றுச்சூழலைக் மாசுபடுத்துகிறான். மரங்களையும் **(Trees)**, ஏரிகளையும் **(Lakes)**, ஆறுகளையும் **(Rivers)**, நீரூற்றுகளையும் **(Fountains)** அவன் கெடுத்துவிடுகிறான். உலகத்தின் சில பகுதிகளில் அமில மழை **(Acid Rain)** பெய்கிறது. அமெரிக்காவில் அதிகமான கந்தக உமிழ்வு **(Sulphur Emission)** ஏற்பட்டு, அது பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. போபாலில் **(Bhopal)** விஷவாயு ஏற்பட்டு அநேகர் மரித்துப்போனார்கள். இன்னும் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்காமல் போராடிக்கொண்டிருக்கிறார்கள். உலகத்தை மனுஷன் கெடுத்துவிட்டான். முதல் நாலு எக்காளங்களில் மனுஷன் தன்னுடைய அறிவினால் உலகத்தை மாசுபடுத்திவிட்டான்.

அதன்பின்பு என்ன பார்க்கிறோம் என்றால், முதாலம் உலக யுத்தத்திலே, ஒரு கோடியே அறுபது லட்சம் **(16 million)** ஜனங்கள் அழிந்துபோனார்களாம். இரண்டு கோடி **(20 million)** மக்கள் காயப்பட்டார்கள். இரண்டாம் உலக யுத்தத்திலே, ஐந்தரை கோடி **(55 million)** மக்கள் செத்துப்போனார்கள். இதெல்லாம் அதிக காலத்திற்கு முன்பு நடந்த காரியமில்லை. அறுபது அல்லது எழுபது வருஷங்களுக்கு முன்புதான் நடந்திருக்கிறது. அவ்வளவு ஜனங்கள் உலகத்தில் மரித்திருக்கிறார்கள். ஆனால், மூன்றாம் உலக யுத்தம் வரும்போது என்ன ஆகும்? எழுநூறு கோடி **(700 Crores)** மக்களும் அழிந்துபோவார்கள். உலகம் முற்றிலும் அழிந்துபோகும். முதாலம் உலக யுத்தத்தைவிட இரண்டாம் உலக யுத்தத்தில் நிறையபேர் செத்திருக்கிறார்கள். ஆனால் மூன்றாம் உலக யுத்தம் முற்றிலுமான அழிவாக **(Total Annihilation)** இருக்கும். **“**சூளையைப்போல எரிகிற நாள் வரும்**”** என்று

சொல்லப்பட்டிருக்கிறது. அப்பொழுதுதான் நமக்கு ஆயிரவருட அரசாட்சி வரும் **(Millennium)**. அல்லேலூயா.

இப்பொழுது, ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொள்கிறார்கள். தொலைக்காட்சியைப் **(Television)** பார்க்கப் பார்க்கப் பிள்ளைகள் கெட்டுப்போகிறார்கள். தொலைக்காட்சியைப் பார்க்கவேண்டும் என்று ஆசை. கணினியில் சினிமா பார்க்கவும் ஆசை. இப்படி வந்து ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்கவேண்டும் என்றும் ஆசை இருந்தால் என்ன அர்த்தம்? ஒரு வருஷம் ஒரு பிள்ளை தொலைக்காட்சியைப் பார்த்தால், அதில் மூவாயிரம் கொலைகளைப் **(Murders)** பார்க்கிறதாம். ஐந்தாயிரம் பலாத்காரங்களை **(Rapes)** பார்க்கிறதாம். பத்தாயிரம் கொள்ளைகளை **(Robbery)** அது பார்க்கிறதாம். அப்படி பார்க்கும்போது என்ன ஆகும்? கண் ஒரு வாசலாக **(Eye is a gate)** இருக்கிறது. அந்த கண் என்கிற வாசல் மூலமாக இந்தக்காரியங்கள் அவர்கள் அடிமனதில் **(subconscious)** பதியும்போது, அந்தப் பிள்ளைகளும் பின்பு அதைப்போலவே செய்வார்கள். செய்திகள் தான் பார்க்கிறோம் என்பார்கள். கடைசியில் அது எப்படி மாறுகிறது? கண் என்கிற வாசல் மூலமாக அவைகள் அடிமனதில் வந்து, அந்தப் பிள்ளைகளுடைய சுபாவமே **(Nature)** மாறிவிடுகிறது.

"மறுரூபப்படுத்தும் தேவனுடைய வல்லமை" **(65 – 0911 God's Power To Transform)** என்ற செய்தியில் சகோ. பிரன்ஹாம் என்ன சொல்லுகிறார்? "எங்கள் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டியை வைக்க நான் விரும்பவில்லை. அது என் வீட்டில் இருக்கவேண்டாம். அதை என் துப்பாக்கியால் சுட்டு உடைத்துப்போடுவேன்" என்று சொல்லுகிறார் **(We rent from a woman that has the television in her house. I never intend to have one in my house. No, sir. I don't want that thing in my house. I would blow it out with my shotgun. I don't want nothing to do with that evil thing)**. அவர் பக்கத்து வீட்டில் தொலைக்காட்சி இருக்கிறது. அவருடைய பிள்ளைகள் அவரிடம் வந்து **"**அப்பா, அங்கே கிறிஸ்துவ பாடல்களைப் பாடுகிறார்கள், நீங்கள் வந்து பாருங்கள். ஓரல் ராபர்ட்ஸ் பிரசங்கம்பண்ணுகிறார்**"** என்று சொன்னார்கள். சகோ. பிரன்ஹாம் அங்கே போய் பார்க்கும்போது, அங்கே எப்படி இருந்தது? ஆடலும் பாடலும் வித்தியாசமாக இருந்தது. **AG** என்கிற ஸ்தாபன சபையின் ஒரு சில பாடல் காட்சிகளை நான் பார்த்தேன். அந்த வாலிபரெல்லாம் போக்கிரிகள் போல இருந்தார்கள். இசைக் கருவியை வாசிக்கிறவனும் அப்படி இருந்தான். பெண்கள் அலங்கோலமான வஸ்திரங்களை அணிந்திருந்தார்கள். அப்படித்தான் அநேக இடங்களில் இருக்கிறது. பால் தங்கய்யாவும் அப்படித்தான் ஆடுவார். சில பாடல்கள் நன்றாக இருக்கிறது. ஆனால் அவர்கள் கிரியைகள் மோசமாக இருக்கும்.

சகோ. பிரன்ஹாம் அதைப் பார்க்கும்போது அவருக்கு வெறுப்பாக இருந்தது. ஆகையால், நான் என் வீட்டில் தொலைக்காட்சியை வைக்கமாட்டேன். கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் கூட சரிகிடையாது. கிறிஸ்தவ நிகழ்ச்சிகளைப் பார்க்கிறோம் என்று கூறித்தான் ஸ்தாபனத்தார் அதை வாங்கி வைத்திருக்கிறார்கள். பின்பு எல்லாவற்றையும் பார்ப்பார்கள். கணினியை நாங்கள் செய்தியைக் கேட்கத்தான் வைத்திருக்கிறோம் என்று சொல்லுவார்கள். பின்பு சினிமா

படங்களைப் போட்டுப்பார்ப்பார்கள். அவர்கள் மாம்சத்துக்குரியவர்கள். பரிசுத்த ஆவியைப் பெறாதவர்கள்.

வாலிபர் என்ன செய்கிறார்கள்? அலைபேசியை **(Cell Phone)** வைத்துக்கொள்வது தவறில்லை. அது தொடர்புகொள்வதற்காக இருக்கிறது. நல்ல காரியங்களும் இருக்கிறது. ஆனால் முழுக்க முழுக்க அதையே பார்த்துக்கொண்டிருந்தால் என்ன ஆகும்? மனசு பாதிக்கப்படும். கண்கள் பாதிக்கப்படும். நேரமும் காலமும் வீணாகும். ஆண்டவர் கொடுத்த நேரம் பொன்னானது. அல்லேலூயா. அந்த நேரத்தை நாம் வீணாக்கலாமா? அது கர்த்தருக்குப் பிரியமாக இருக்குமா? எதோ குழந்தையாக இருந்தபோது பார்த்தோம். நன்றாக வளர்ந்தபின்பும் அப்படி பார்க்கலாமா? அதெல்லாம் கர்த்தருடைய வருகையின் நேரத்திலே நம்முடைய ஆத்துமாவை பாழாக்கும். அன்றைக்கு அப்படித்தான் நோவா காலத்தில் வந்தது. அதைப்போலவே இப்பொழுதும் நடக்கிறது.

"ஜாமக்காரனே இப்பொழுது நேரம் என்ன?" **(Watchman What of The Night?)** என்ற செய்தியில் சகோ. பிரன்ஹாம், "விஞ்ஞானிகள் போய் தேவனுடைய ஆய்வகத்திலிருந்து அந்த விதிமுறையைத் திருடி, அணுவல்லமையைக் கண்டுபிடித்துவிட்டார்கள்" என்று சொல்லுகிறார் **(When the cup of iniquity begins to fill God has to get rid of it. Science began to break into God's laboratory, atomic power was discovered)**. நோவா காலத்தில் அணுவல்லமை இருந்தது. கூம்பகத்தைக் **(Pyramid)** கட்டும்போது பல டன் **(ton)** எடையுள்ள பெரிய கற்களை எப்படிக் கொண்டுபோனார்கள் என்று வியப்பாக இருக்கிறது, ஏனென்றால், இந்தக் காலத்திலேயே அவ்வளவு எடையுள்ள கற்களை மேலே தூக்கிவைப்பதற்கு இயந்திரங்கள் இல்லை. அவர்கள் எப்படி கொண்டுபோனார்கள்? நீராற்றல் **(Hydraulic Power)** இல்லை. அணுவல்லமையால் **(Atomic Power)** கொண்டுபோய் இருக்கிறார்கள். அன்றைக்கு அணுவல்லமையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்றைக்கும் மனுஷன் அணுவல்லமையைத் தேவனுடைய ஆய்வகத்திலிருந்து கண்டுபிடித்துவிட்டான். தகவல் தொடர்பு முறை **(Communication System)**, போக்குவரத்து அமைப்பு **(Transporting System)**, விண்வெளி திட்டம் **(Space Program)** போன்ற எல்லாமே இப்பொழுது வந்துவிட்டது. எல்லாமே இப்பொழுது இணையமயமாக **(Internet)** இருக்கிறது. இணையம் இல்லாமல் இப்பொழுது ஒரு காரியமும் நடக்காது. அவ்விதமான காலம் உலகத்தில் வந்துவிட்டது. அணுவல்லமையைக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

ஐன்ஸ்டீன் **(Einstein)** என்ற விஞ்ஞானி அணுவை பிளப்பது எப்படி என்று கண்டுபிடித்தார் **(He studied the Law of Light. He found how to split the atom)**. அணுவைப் பிளந்தால் பெரிய சக்தி ஏற்படும். ஆண்டவர் ஒரு தீர்க்கதரிசியை அதைவிட மேலான விஞ்ஞானியாக வைத்திருக்கிறார். அல்லேலூயா. உரைக்கப்பட்ட வார்த்தை **(Spoken Word)** எப்படி கிரியைச் செய்கிறது என்பதை அவர் கண்டுபிடித்தார். "அணில்கள் உண்டாகக்கடவது" என்று சொல்லும்போது அணில்கள் வந்தது. அல்லேலூயா. "சிறிய மீனே, கர்த்தர் உனக்கு ஜீவனைக்கொடுக்கிறார்" என்று சொல்லும்போது, உடனே அந்த மீனுக்கு ஜீவன் வந்தது. விஞ்ஞானிகள் அதைச் செய்யமுடியுமா? அதைவிட மேலான வல்லமையை ஆண்டவர் இன்றைக்கு உங்களுக்கும் எனக்கும் தந்திருக்கிறார். ஐன்ஸ்டீனுக்குக் கொடுத்த ஞானத்தைவிட விசேஷித்த ஞானத்தை நமக்குத் தந்திருக்கிறார். ஐன்ஸ்டீன் தேவனுடைய

ஆய்வகத்திலிருந்து **(God's Laboratory)** அதைக் கண்டுபிடித்துக்கொண்டார். தேவனுடைய ஆய்வகத்தில் எல்லா விதிகளும் **(Formula)** பிரமாணங்களும் இருக்கிறது. மனுஷனை ஆண்டவர் அங்கே அனுமதித்துவிட்டார். அவன் எல்லாவற்றையும் கண்டுபிடிக்கிறான். இவ்விதமாக உலகம் மாறிவிட்டது. நோவா காலத்தில் உலகம் அவ்விதமாக இருந்தது. பூமி கெட்டுப்போனது. பின்பு மனுஷர்கள் கெட்டுப்போனார்கள்.

முதல் நாலு எக்காளங்களில் பூமி கெட்டுப்போனது. மீதி இருக்கிற மூன்று எக்காளங்கள் மனுஷர்கள் சீர்கெட்டுப்போனதைக் குறிக்கிறது. ஆதியாகமத்தில் என்ன இருக்கிறதோ அது வெளிப்படுத்தலில் இருக்கிறது **(Whatever is in Genesis is in Revelation in the harvest time)**. ஆதியாகமம் வித்தின் காலம் **(Seed Time)**. வெளிப்படுத்தல் அறுவடையின் காலம் **(Harvest Time)**. இப்பொழுது அதைவிட பன்மடங்காக **(Multiple Form)** வந்திருக்கிறது. ஆமென். பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது **(The earth was filled with violence)**. ஆகையால், கர்த்தர் என்ன சொன்னார்?

**<u>ஆதியாகமம் 6: 12, 13</u>**

12. தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள்.
13. அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவேன்.

இதோ, அவர்களை பூமியோடுகூட அழித்துப்போடுவேன் என்று சொன்னார். மனுஷன் எல்லாவற்றிலும் மேலே மேலே போகவேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறான் **(Everything moved in a higher level)**. மனுஷன் தனக்கு எல்லையற்ற வல்லமை **(Unlimited Power)** தேவை என்று நினைக்கிறான். உதாரணமாக, ஒரு கோழி வளர்வதற்கு ஒரு வருஷம் ஆகும். அதற்குப் பின்பு அது முட்டைப் போடும். பின்பு அது அடைக்காத்து குஞ்சு பொரிக்கும். மனுஷன் இப்பொழுது என்ன செய்கிறான்? ஆறு மாதங்களில் ஒரு கோழியைக் கொண்டுவருகிறான். நாட்கள் ஆக ஆக மூன்று மாதங்களிலேயே அதை உற்பத்திசெய்கிறான். இப்பொழுது, நாலு வாரங்களில் அதைக் கொண்டுவரவேண்டும் என்று முயற்சி செய்கிறான். மிகவும் குறுகிய காலத்தில் அதிகமான உற்பத்தியைச் செய்யவேண்டும் என்று சொல்லித்தான் கலப்பின வகையைக் **(Hybridization)** கொண்டுவருகிறான். விவசாயத்திலும், மிருக இனங்களிலும் இனக்கலப்பைக் கொண்டுவந்ததால், தூய்மையான ஆகாரம் **(Hygienic Food)** இன்றைக்கு எதுவும் இல்லை. நாம் சாப்பிடுகின்ற எல்லாமே கலப்படமாக இருக்கிறது. சீக்கிரத்தில் அதிகமான உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று மரபணு விதியை **(Genetic Code)** மாற்றி இவ்விதமாக செய்யும்போது, நம்முடைய சரீரம் அதனால் பாதிக்கப்படுகிறது. விஞ்ஞானத்தினாலே அப்படி செய்து மனுஷன் உலகத்தைத் தீட்டுப்படுத்திவிட்டான்.

பாதாளக்குழி **(Bottomless Pit)** திறக்கப்பட்டிருக்கிறது. ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொள்கிறார்கள். கொடுங்கோல் மன்னர்கள் வந்து, மத சம்பந்தமான ஆவியை

அவிழ்த்துவிடுகிறார்கள். உலகமானது சீர்கெட்டதாய் இருக்கிறது. கல்கத்தாவில் **70%** மக்கள் ஒரு அறை மட்டும் இருக்கும் வீடுகளில் வாசம்பண்ணுகிறார்களாம். ஆறு லட்சம் பேருக்கு சொந்த வீடு இல்லையாம். கல்கத்தா மிக மோசமான நிலைமையில் இருக்கிறது. மிக ஏழைகள் அங்கே இருக்கிறார்கள். மும்பையில் அதிக நெருக்கடி உள்ளது. சென்னையிலும் அதற்கு அடுத்தபடியாக நெருக்கடி இருக்கிறது. இப்பொழுது ஜனங்கள் மிக குறுகிய இடத்தில் வாசம்பண்ணுகிறார்கள். இப்படி பட்டணங்கள் உருவாக உருவாக பாவம் பெருகுகிறது. முதலாவது பட்டணத்தை உண்டாக்கினது யார்? காயீன் உண்டாக்கினான்.

**ஆதியாகமம் 4: 17**

17. காயீன் தன் மனைவியை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, ஏனோக்கைப் பெற்றாள்; அப்பொழுது அவன் ஒரு பட்டணத்தைக் கட்டி, அந்தப் பட்டணத்துக்குத் தன் குமாரனாகிய ஏனோக்குடைய பேரை இட்டான்.

முதலாவது கட்டிடக்கலைஞன் **(Architect)** இந்தக் காயீன்தான். அவன் ஒரு பட்டணத்தைக் கட்டி, அதற்குத் தன் குமாரனாகிய ஏனோக்குடைய பேரை இட்டான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நிறைய கட்டிடக்கலைஞர்கள் தோன்றி அடுக்குமாடி குடியிருப்புகளை **(Flats)** அதிகமாக உருவாக்குகிறார்கள். ஒரே இடத்தில் நாலு வீட்டைக் கட்டி, பத்து வீட்டைக் கட்டி, இப்படியாக அந்த இடத்தையெல்லாம் நிரப்புகிறார்கள். இதனால், தண்ணீர் கெட்டுப்போகிறது **(Water Pollution)**. எல்லாமே சீர்கெட்டுப்போகிறது.

ஜனங்கள் அதிக உலகப்பிரகாரமாக மாறி, வார்த்தைக்கு அப்பாற்பட்டு ஜீவிக்கிறார்கள். கருத்தடை **(Birth Control)**, குடும்ப கட்டுப்பாடு **(Family Planning)**, ஒழுக்கமின்மை **(Immorality)**, கட்டுப்பாடற்ற பாலியல் உறவு **(Free Love & Sex)** போன்றவை இப்பொழுது மிக அதிகமாகியிருக்கிறது. அந்தக் காலத்தில் குடும்ப கட்டுப்பாடும் இல்லை. கருத்தடையும் இல்லை. பத்து குழந்தைகளைப் பெற்றார்கள். இப்பொழுது, இவ்விதமாக வந்து ஒழுக்கமின்மை அதிகமாகிறது. அதனால், பாவம் அதிகமாகப் பெருகுகிறது.

பெலவீனமான சந்ததி **(Weaker Generation)** ஏற்படுகிறது. எல்லா விதமான குழப்பமும் தாறுமாறான காரியங்களைச் செய்து, மனுஷன் இன்றைக்கு சோதோம் கொமோராவைக் கொண்டுவந்துவிட்டான் **(All kinds of perversion to bring back Sodom again)**. உலகம் இன்றைக்குச் சோதோமாக மாறிவிட்டது. அமெரிக்கா மட்டுமல்ல, முழு உலகமும் இன்றைக்குச் சோதோமாக மாறிவிட்டது.

தொழிற்சாலைகளிலிருந்து நச்சுக் கழிவுகள் **(Toxic Waste)** வருகிறது. அதெல்லாம் விஷமாக **(Poison)** இருக்கிறது. அணு உலைகளை ஏற்படுத்தும்போது நச்சுக் கழிவுகள் வருகிறது. அதைக் கொண்டுபோய் சமுத்திரத்தில் போட்டு, நீர் நிலைகளில் போட்டு, பிளாஸ்டிக் கழிவுகளையும் அங்கே போடும்போது, எல்லாமே சீரழிந்துபோனது. பூமியை ஆண்டவர் பார்க்கிறார். அது சீர்கெட்டதாயிருக்கிறது. இன்றைக்கும் அது சீர்கெட்டதாயிருக்கிறது. ஆண்டவர் உண்டாக்கின பரிசுத்த பூமியை மனுஷன் அவ்விதமாக மாற்றிவிட்டான். பிளாஸ்டிக் கழிவுகள் மக்காது. அது பூமியைக் கெடுக்கும்.

அதுமாத்திரமல்ல, இப்பொழுது உலகமானது கொடுமை, சண்டைகள், கொலைகள், பிரச்சனைகள், குழப்பங்கள், இவ்விதமான காரியங்களால் நிறைந்திருக்கிறது. கணவனுக்கு மனைவியைக் கையாளத் திறமையில்லை, தைரியமில்லை, ஞானமில்லை. மனைவி கணவனுக்கு மரியாதைக் கொடுக்காமல் அவன்மேல் ஆதிக்கம் செலுத்துகிறாள். இது என்ன தாறுமாறான காரியம் என்று பாருங்கள். பெண் ஆதிக்கம் என்பது உலகத்திற்குச் சாபமாக இருக்கிறது **(Female domination is a curse to the world)** என்று சகோ. பிரன்ஹாம் சொல்லுகிறார். ஒரு வேளை பெண்ணுக்குத் திறமை இருக்கலாம். ஆனால் ஆதிக்கம் செலுத்தலாமா? கணவனுக்கு மரியாதை இல்லாமல் நடக்கலாமா? இவ்விதமான உலகம் இது! ஆனால், செய்தியில் இருக்கிறோம் என்று சொல்லுவார்கள். அது எப்படி? தங்களுடைய பார்வையில் அவர்கள் நீதிமானாகத் தெரியலாம். ஆனால் கர்த்தர் எப்படி நினைக்கிறார் என்று பார்க்கவேண்டும். தேவனுடைய வார்த்தை அதைக்குறித்து என்ன சொல்லுகிறது? தீர்க்கதரிசி என்ன சொல்லுகிறார்? பெண் ஆதிக்கம் என்பது உலகத்திற்குச் சாபமாக இருக்கிறது என்று சொல்லுகிறார். அவ்விதமான பெண் யேசபேலாக இருக்கிறாள். யேசபேல் இருக்கிறாள் என்றால், கணவன் ஆகாபைப் போல இருக்கவேண்டும். கணவன் தாவீதைப் போல இல்லை. குடும்பத்தை கையாளத் திறமையில்லை. அதனால் பெண் ஆதிக்கம் செலுத்துகிறாள்.

ஒரு புத்தியுள்ள ஸ்திரீ, தன் கணவனை வார்த்தையின்படி கொண்டுவந்தால் சந்தோஷப்படலாம், ஆனால் வார்த்தைக்கு அப்பாற்பட்டு ஆதிக்கம் செலுத்தினால்? கலாச்சாரங்கள் கெட்டுப்போய்விட்டது. குடும்ப வாழ்க்கைக் கெட்டுப்போய்விட்டது. எல்லாம் மாசுபட்டுப்போனது. முதல் இரண்டாயிரம் வருஷத்திலே அப்படியானது. அதைப்போல, இன்றைக்கு புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இரண்டாயிரம் வருஷம் ஆகும்போது, அவ்விதமான ஒரு காலம் வந்திருக்கிறது. பூமி கெட்டுப்போனது **(The earth is corrupted)**. சுற்றுச்சூழல் கெட்டுப்போனது **(Environment is corrupted)**. குடும்ப வாழ்க்கைக் கெட்டுப்போய்விட்டது **(Family life is corrupted)**. பூமி கொடுமையினால் நிறைந்திருக்கிறது **(The earth is filled with violence)**.

ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டை அழிப்பதற்கு ஆயத்தமாகிறது. அமெரிக்காவும் ரஷ்யாவும் என்னதான் நட்பாகப் பேசினாலும், அமெரிக்காவை அழிப்பதற்கு ரஷ்யா அணுகுண்டுகளை வைத்திருக்கிறது. அமெரிக்காவும் ரஷ்யாவிற்கு விரோதமாகத்தான் இருக்கிறது. பாகிஸ்தானும் இந்தியாவும் என்னதான் பேச்சுவார்த்தை நடத்தினாலும், பாகிஸ்தான் நம்மை அழிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறது. நாமும் எதிர் தாக்குதல்பண்ண ஆயத்தமாக இருக்கிறோம். இதுதான் உலகம். எங்கே பார்த்தாலும் யுத்தங்கள்தான். இஸ்லாமிக் ஸ்டேட் **(Islamic State)** தீவிரவாதிகள் எத்தனையோ பேரைக் கொலைசெய்துவிட்டார்கள். எவ்வளவோ கொடுமைகளைச் செய்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பெண்களின் வாழ்க்கையை நாசமாக்கிவிட்டார்கள். இப்பொழுதும் அது நடந்துகொண்டுதான் இருக்கிறது. உலகத்தின் ஒரு பகுதியில் நடந்துகொண்டிருக்கிறது. அப்பாவித் தமிழர்களை சிங்களர்கள் கொன்றுபோட்டார்கள். ஒரு கிராமத்தையே முற்றிலும் அழித்துப்போட்டார்கள். இதுதான் உலகத்தில் நடந்துகொண்டிருக்கிறது. பூமி கொடுமையினால் நிறைந்திருக்கிறது. எப்போதும் அது நடந்துகொண்டுதான் இருக்கிறது.

இவ்வளவு பெரிய விஞ்ஞான உலகத்திலே, தகவல் தொடர்பு நிறைந்த உலகத்திலே, கொடுமைகள் பல இடங்களில் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் கர்த்தர் நம்மை, அவரால்

கொடுக்கப்பட்ட வழியில் **(God's Provided Way)** கொண்டுவந்திருக்கிறார். தேவன் எல்லாவற்றிற்கும் ஒரே ஒரு வழியைத்தான் வைத்திருக்கிறார் **(God has only one provided way for everything)**. அந்த வழியில் நாம் வந்திருக்கிறோம். அவர் நோவா மூலமாக ஒரு செய்தியை அனுப்பியிருக்கிறார். ஆமென்.

மத்தேயு 24ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து பேசும்போது, முதல் எட்டு வசனங்களில் முதல் நான்கு முத்திரைகளைக் குறித்துப் பேசுகிறார். 9ம் வசனத்திலிருந்து 11ம் வசனம் வரைக்கும் ஐந்தாம் முத்திரையைக் குறித்துப் பேசுகிறார். பின்பு 29ம் வசனத்திலிருந்து 31ம் வசனம் வரைக்கும் ஆறாம் முத்திரையைக் குறித்துப் பேசுகிறார். ஏழாம் முத்திரையைக் குறித்து அவர் பேசும்போது, அவர் என்ன சொல்லுகிறார்? உவமைகளைச் சொல்லுகிறார். அதை நேரடியாகப் பேசாதபடி உவமைகளாகச் சொல்லுகிறார். என்ன உவமையைச் சொல்லுகிறார்?

**<u>மத்தேயு 24: 32 - 34</u>**

32. அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்.
33. அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.
34. இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

என்று சொல்லுகிறார். அதன்பின்பு அவர், "மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது என் பிதா ஒருவர் தவிர மற்றொருவரும் அறியார்" என்று ஏழாம் முத்திரையைக் குறித்துச் சொல்லுகிறார் **(It's the Coming of the Lord)**. நாம் அந்த காலத்திலும் சமயத்திலும் **(Time and Season)** இருக்கிறோம். ஆனால் அந்த நாளும் நேரமும் **(Day and Hour)** நமக்குத் தெரியாது. ஆனால் கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறார்? நோவா காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே நடக்கும். அவர் ஏழாம் முத்திரையைப் பற்றி பேசும்போது, அத்திமரத்தைக் குறித்துச் சொல்லுகிறார். இன்றைக்கு யூதர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு வந்திருக்கிறார்கள். உலகம் நோவா காலத்தை அடைந்திருக்கிறது.

**<u>மத்தேயு 24: 37 - 39</u>**

37. நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்.
38. எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும்,
39. ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்.

நோவா காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வெளிப்படும் காலத்திலும் நடக்கும். இப்பொழுது, மனுஷகுமாரன் வெளிப்படும் காலத்திலே நாம் ஜீவிக்கிறோம். தேவனுடைய குமாரனுக்கும் **(Son of God)** தாவீதின் குமாரனுக்கும் **(Son of David)** மத்தியிலே மனுஷகுமாரனின் **(Son of Man)** ஊழியம் வந்திருக்கிறது. இப்பொழுது நாம் அந்த மனுஷகுமாரனின் ஊழியத்தில் இருக்கிறோம். பலமுள்ள தூதனாகிய கிறிஸ்து **(Mighty Angel Christ)** இறங்கி வந்திருக்கிறார். அந்த இடைவெளி நேரத்தில் நாம் இருக்கிறோம். **(MSG: Future Home)**. நோவாவின் செய்தி மூலமாக யார் யார் அவனுடன் பேழைக்குள் பிரவேசித்தார்களோ, அவர்கள்தான் தண்ணீர் முழுக்குபெற்ற புதிய உலகத்திற்கு வந்தார்கள் **(Those who went in with Noah by his message were the ones who walked out upon the new earth after its water baptism)**. யார் யார் பேழைக்குள் போனார்களோ அவர்கள்தான் புதிய உலகத்திற்கு வந்தார்கள். அதைப்போல, யார் யார் எடுத்துக்கொள்ளப்படுதலில் மேலே போகிறார்களோ அவர்கள்தான் மறுபடியும் பூமிக்கு வருவார்கள்.

மேலே செல்லவேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்? பரிபூரணம் **(Perfection)** அடையவேண்டும். குழந்தைகளாக இருக்கக்கூடாது. குழந்தைகள் வாக்குவாதம்பண்ணும், சண்டை போடும். தேவையில்லாத கரியங்களையெல்லாம் கேட்டு அடம்பிடித்து அழும். அவ்விதமான புத்தி நமக்கு இருக்கக்கூடாது. நாம் முதிர்ச்சியடைய **(Maturity)** வேண்டும். நிதான புத்தி நமக்கு வேண்டும். எல்லாவற்றையும் நிதானமாக கையாள வேண்டும். நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கத் தெரியவேண்டும். எது கர்த்தருக்குப் பிரியம் எது கர்த்தருக்குப் பிரியமில்லாதது என்று தெரியவேண்டும். பிள்ளைகளுக்கு நன்மை தீமை இன்னதென்று தெரியாது. அது பிளேடைக்கூட **(blade)** கேட்டு அடம்பிடிக்கும். அதைப்போல நாம் இருக்காதபடி, இது கெட்டது, இது நமக்கு வேண்டாம் என்று நினைக்கவேண்டும். கர்த்தருடை வார்த்தையின்படி ஜீவிக்கவேண்டும். நாம் பூரணராக வேண்டும். பரிபூரண மனிதனின் வளர்ச்சியை **(Stature of a Perfect Man)** அடையவேண்டும். அல்லேலூயா. அப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுதலில் **(Rapture)** போகலாம். யார் யார் மேலே சென்றார்களோ அவர்கள்தான் கீழே வருவார்கள்.

நோவாவின் பேழை தண்ணீருக்கு மேலே சென்றது. பேழை நியாயத்தீர்ப்பிற்கு மேலே போனது. அல்லேலூயா. ஏழாம் எக்காளம் ஊதும்போது, அது உலகத்தின் முடிவாக இருக்கிறது. உலகத்துக்கு அது நியாயத்தீர்ப்பையும் **(Judgment)**, நமக்கு ஆயிரவருட அரசாட்சியையும் **(Millennium)** கொண்டுவருகிறது. அல்லேலூயா.

ஆண்டவர், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கப்போகிறார். இந்த இயற்கையைக் கெடுத்தவர்கள், தங்கள் வாழ்க்கையின் ஒழுக்கத்தைக் **(Moral Life)** கெடுத்தவர்கள் எல்லாரையும் ஆண்டவர் அழித்து நிக்கிரகம்பண்ணும்போது, நாம் மேலே பாதுகாப்பான இடத்தில் இருப்போம். அல்லேலூயா. இப்பொழுது நாம் பேழைக்குள் வந்திருக்கிறோம். நியாயத்தீர்ப்பு வரும்போது அதற்கு மேலாக நாம் போவோம். ஜனங்கள் அணு அக்கினியில் **(Atomic Fire)** சிக்கிக்கொள்வார்கள். அர்மகெதோன் யுத்தத்தில் **(Battle of Armageddon)**

மாட்டிக்கொள்வார்கள். அப்பொழுது நாம் பாதுகாப்பான இடத்தில் இருப்போம். பின்பு புதிய உலகத்திற்கு நாம் வருவோம். எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்?

அன்றைக்கு உலகம் தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு **(Water Baptism)** வந்தது. இன்றைக்கு அது அக்கினி ஸ்நானத்திற்கு **(Fire Baptism)** வருகிறது. அதற்குபின்பு, நாம் கீழே வந்து இந்தப் பூமியில் வாசம்பண்ணுவோம். இந்தப் பூமிதான் மனுஷன் வாழுவதற்கு உண்டாக்கப்பட்ட ஒரு கிரகமாய் இருக்கிறது. செவ்வாய் கிரகத்தில் மனுஷன் வாழும்படியாக ஆண்டவர் உண்டாக்கவில்லை. நிலாவில் போய் வாழும்படியாக ஆண்டவர் உண்டாக்கவில்லை. அங்கே எதற்காகப் போகவேண்டும்? நிலாவிற்கு செல்லவும், செவ்வாய் கிரகத்திற்குப் போகவும் எத்தனையோ கோடிக்கணக்கான பணத்தை **(dollars)** அமெரிக்கா செலவு செய்கிறது. அது மனுஷன் வாழுவதற்கு உண்டாக்கப்பட்ட இடமா? இந்தப் பூமியைத் தான் ஆண்டவர் அப்படி உண்டாக்கினார். அல்லேலூயா. அதற்காகப் பணம் செலவழிப்பது வீண். நாம் இந்தப்பூமிக்கு மறுபடியும் வந்து ஆளுகை செய்வோம். ஆமென்.

நோவாவும் அவனுடைய குடும்பமும் புதிய உலகத்தில் இருப்பது **(Noah and his family in the New Earth)** எதற்கு அடையாளமாக இருக்கிறது? ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் **(Adam and Eve in the Garden of Eden)** இருந்ததற்கு அடையாளமாக இருக்கிறது. அல்லேலூயா. ஆதாம் ஏவாள் ஏதேனை இழந்துபோனார்கள். நோவாவும் அவன் சந்ததியும் உலகத்தைச் சுதந்தரித்துக்கொண்டார்கள். கடைசியாக கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியும் இந்த உலகத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்?

நோவாவின் செய்தி ஒரு கூட்டமான ஜனங்களை இழுத்தது **(Noah's Message pulled a group of people)**. இன்றைக்கு, தீர்க்கதரிசி மூலமாக கொடுக்கப்பட்ட இந்தக் கடைசிகால செய்தி, மணவாட்டியின் சத்தத்தின் மூலமாக ஒரு கூட்டமான ஜனங்களை இழுக்கிறது. அல்லேலூயா. எங்கே இழுக்கிறது? பேழைக்குள் இழுக்கிறது. பாதுகாப்பான இடத்திற்கு இழுக்கிறது.

நோவா நியாயத்தீர்ப்பைச் சொல்லும்படியாக வந்தான் **(Prophet Noah comes to pronounce the Judgment)**. கர்த்தர் சகோ. பிரன்ஹாமிடம், கல்லை எடுத்து மேலே போடு என்று சொல்லி, இன்னும் இருபத்து நாலு மணிநேரத்திற்குள் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள் என்று சொன்னார் **(Thus saith the Lord, within twenty four hours you will see the Glory of God)**. புயல் காற்று வந்தது. மலையின் முகடுகளை உடைத்தது. அலாஸ்கா **(Alaska)** பூமியதிர்ச்சியினால் தண்ணீருக்குள் மூழ்கிவிடுவதுபோல சூழ்நிலை ஏற்பட்டது. அன்றையிலிருந்து நியாயத்தீர்ப்பு தாக்கிக்கொண்டிருக்கிறது. நியாயத்தீர்ப்பானது மேற்கு கடற்கரையைத் தாக்கியது **(The judgment is striking on the West Coast)**. 1964ல் இருந்து நியாயத்தீர்ப்பு உலகத்தைத் தாக்கிக்கொண்டிருக்கிறது. பின்பு அது முற்றிலுமாக அழிந்துபோகும். ஆமென்.

நோவாவும் அவன் குடும்பத்தாரும் புதிய உலகத்திற்கு வந்தார்கள். உலகம் அன்றைக்கு அவர்களுக்குச் சொந்தமானது. பாவிகள் **(Sinners)**, விஞ்ஞானிகள் **(Scientists)**,

அரசியல்வாதிகள் **(Politicians)**, மதவாதிகள் **(Religious People)**, ஒழுக்கமற்றவர்கள் **(Immoral People)**, துன்மார்க்கர் **(Wicked People)**, போன்றவர்கள் கையில் இந்த உலகம் இப்பொழுது விடப்பட்டிருக்கிறது. ஆண்டவர், இவர்களிடமிருந்து அதைப்பறித்து நம்முடைய கையில் கொடுக்கப்போகிறார். அல்லேலூயா.

நோவா காலத்தில் ஆண்டவர் உலகத்தைத் தண்ணீரினால் முற்றிலுமாக அழித்து அதை நோவாவிடம் கொடுத்தார். இப்பொழுது இந்த உலகத்தை ஆண்டவர் அக்கினியால் முற்றிலும் அழித்து நம்மிடம் கொடுக்கப்போகிறார். முதலாவது தண்ணீர் **(Water)**, இரண்டாவது இரத்தம் **(Blood)**, மூன்றாவது அக்கினி **(Fire)**. இயேசுகிறிஸ்து பூமியின்மேல் உரிமைக்கோருவதற்காக இரத்தத்தைச் சிந்தினார். இப்பொழுது, அக்கினியால் இந்த உலகத்தை அழித்து, பாவிகள் துன்மார்க்கர், வார்த்தையைப் புறக்கணித்த மக்கள், ஆகியவர்களை அழித்து பரிசுத்தவான்களுக்கு இந்த உலகத்தைத் தரப்போகிறார். அல்லேலூயா.

ஆதாம் இழந்துபோன பூமியானது மறுபடியும் அவனுடைய சந்ததியிடம் வரப்போகிறது. ஆண்டவர் அதைச் சர்ப்பத்தின் வித்துக்களிடமிருந்து பறித்து நமக்குத் தரப்போகிறார். ஆமென். அப்பொழுது விசுவாச உலகமாக **(Faith Civilisation)** இருக்கும். இப்பொழுது விஞ்ஞான உலகமாக இருக்கிறது. இதிலிருந்து ஆண்டவர் மறுபடியும் நமக்கு விசுவாசத்தைக் கொண்டுவருவார். அமென். இப்பொழுது, விஞ்ஞான உலகத்தில் நாம் விசுவாசத்திலே ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். ஆமென். பாவிகள் கையிலிருந்து உலகத்தை மீட்டு, நோவாவின் குடும்பத்திற்கு அதைக் கொடுப்பதற்காக கர்த்தர் அங்கே இறங்கி வந்தார். நோவாவுடன் பேசினார். பேழையை உண்டுபண்ண சொன்னார். இந்தக் கடைசி காலத்தில் கர்த்தர் பலமுள்ள தூதனாக இறங்கி வந்திருக்கிறார். அவர் உலகத்தின் உரிமைப் பத்திரத்தைக் **(Title Deed)** கொண்டுவந்திருக்கிறார். அல்லேலூயா.

**வெளி 10: 1 – 3**

1. பின்பு, பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது, அவனுடைய சிரசின்மேல் வானவில்லிருந்தது, அவனுடைய முகம் சூரியனைப்போலவும், அவனுடைய கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப்போலவும் இருந்தது.
2. திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது; தன் வலது பாதத்தைச் சமுத்திரத்தின்மேலும், தன் இடதுபாதத்தைப் பூமியின்மேலும் வைத்து,
3. சிங்கம் கெர்ச்சிக்கிறதுபோல மகாசத்தமாய் ஆர்ப்பரித்தான்; அவன் ஆர்ப்பரித்தபோது ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின.

எத்தனைப்பேர் அந்த உரிமைப் பத்திரத்தை உடையவர்களாய் இருக்கிறோம்? உண்மையாகவே அந்த உரிமைப் பத்திரத்தில் நம்முடைய பேர் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். ஒவ்வொரு செய்தியும் அதை தெளிவுபடுத்தும் **(Clarify)**. இது தெளிவுபடுத்தும் காலம் **(Age of Clarification)**. நம்மிடம் என்ன சான்றிதழ் இருந்தாலும், அது உண்மையா அல்லது போலியா என்று பரிசோதிக்கப்படும். இந்த காலத்தில் எதையெடுத்தாலும் உண்மையா போலியா என்று தெளிவுபடுத்த வேண்டும். அதைப்போல, ஐந்துவிதமான ஊழியத்தின் **(Fivefold Ministry)** மூலமாகக் கொடுக்கப்படுகிற செய்தி,

போதகர் மூலமாகக் கொடுக்கப்படுகிற செய்தி, உங்களுடைய பேர் அங்கே இருக்கிறதா இல்லையா என்று தெளிவுபடுத்தும்.

ஆண்டவர் திறக்கப்பட்ட புஸ்தகத்தோடு வந்திருக்கிறார். நீங்கள் கண்டுபிடிக்கவேண்டும். இதற்கு முன்னாலே உள்ள செய்தி அதைத் தெளிவுபடுத்தாது. லூத்தர் **(Luther)**, வெஸ்லி **(Wesly)** மூலமாகக் கொடுக்கப்பட்ட செய்தி அதைத் தெளிவுபடுத்தாது. அப்பொழுது முத்திரிக்கப்பட்டிருந்தது. பெந்தெகொஸ்தே செய்தி அதைத் தெளிவுபடுத்தாது. ஆனால் இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற அபிஷேகம் **(Anointing)** வேறு. இப்பொழுது புஸ்தகம் திறக்கப்பட்டிருக்கிறது **(You see your name in the Lamb's Book of Life)**. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் உங்கள் பேரை பார்க்கிறீர்கள். அல்லேலூயா. அப்படியென்றால் நிச்சயமாக நீங்கள் எடுத்துக்கொள்ளப்படுவீர்கள். உங்களுடைய ஜீவியம் அதை அடையாளப்படுத்தும்.

ஆண்டவர் இறங்கி வந்து, நோவாவுக்கு உரிமைப்பத்திரத்தைக் கொண்டுவருகிறார். அந்தச் செய்தி அவனுக்கு உரிமைப்பத்திரத்தைக் கொண்டுவருகிறது. "நீதான் இந்தப் பூமிக்குச் சுதந்தரவாளி. சர்ப்பத்தின் வித்துக்கள் உலகத்தைக் கெடுத்துவிட்டார்கள். ஒழுக்கம் கெட்டுபோனது. பூமி கெட்டுப்போனது. எங்கே பார்த்தாலும் கொடுமைகள் நடக்கிறது. கொலைகள், யுத்தங்கள் நடக்கிறது. எல்லாமே மாசுபட்டுப்போனது. நான் அவர்கள் கையில் இருந்து அதைப் பிடுங்கி உன்னிடம் தருகிறேன். நான் தான் அதின் உரிமையாளர். இப்பொழுது அந்த உரிமைப்பத்திரத்தை உனக்குத் தருகிறேன்" என்ற செய்தியோடு ஆண்டவர் இறங்கி வந்தார். அது கிருபையின் செய்தி **(Message of Grace)**. அதே நேரத்தில் அது நியாயத்தீர்ப்பின் செய்தியாகவும் **(Message of Judgment)** இருக்கிறது. அல்லேலூயா. அதே காரியத்தை ஆண்டவர் இன்றைக்குச் செய்திருக்கிறார். எத்தனைப்பேர் உரிமைப்பத்திரத்தை உடையவர்களாய் இருக்கிறோம்? நம்முடைய பேரை அங்கே கண்டுபிடித்தோமென்றால், ஒருக்காலும் அது கிறுக்கப்படாது. அல்லேலூயா. அந்த நிச்சயத்தைத் தருவதற்காக கர்த்தர் இன்றைக்கு இறங்கி வந்திருக்கிறார். இந்தச் செய்தி உங்களை நிச்சயப்படுத்துகிறது. ஆமென்.

முதலாவது விசுவாச நாகரிகம் **(Faith Civilisation)** இருந்தது. வார்த்தையை உரைக்கும்போது அது அப்படியே நடந்தது **(Spoken Word Manifestation)**. மறுபடியும் அது வரப்போகிறது. ஆமென். விஞ்ஞான நாகரிகம் முடியும்போது, நமக்கு ஆயிர வருஷ அரசாட்சியில் விசுவாச நாகரிகம் வரும். ஆமென்.

இன்றைக்கு ஆண்டவர் நமக்கு, உலகத்தைவிட்டு மேலே எடுத்துக்கொள்ளப்படுவதற்கான கிருபையைத் **(Entering into a Rapturing Grace to be taken off the face of the earth)** தருகிறார். ஆமென். ஆண்டவர் அவருடைய கிருபையினால் என்னைத் தெரிந்துகொண்டிருக்கிறார். எல்லாமே கிருபைதான் அல்லேலூயா. நீங்கள் செய்திக்கு நன்றாக செவிகொடுக்கிறீர்கள் **(Respond)** என்றால் அது கிருபையினால் தான். நாம் ஒருவரை பாராட்டும்போது, உண்மையாகவே அவர்கள் அந்த பாராட்டுக்கு பாத்திரவான்களாக இருந்தால் அவர்கள் வாழ்க்கை அதை நிரூபிக்கும். அப்படி பாத்திரவானாக இல்லையென்றாலும் அது வெளிப்படும். கர்த்தர் அவர்களை தெரிந்துகொள்ளப்பட்டவர்களா இல்லையா என்று தெளிவுபடுத்துகிறார். இது அவ்விதமான ஒரு காலம். நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களா இல்லையா, எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெறுவோமா பெறமாட்டோமா என்பதை ஆண்டவர் நமக்குத் தெளிவுபடுத்துவார். நாம் அதைக் கண்டுபிடிக்கவேண்டும். ஆண்டவர் நமக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கான கிருபையைத் தருகிறார்.

நோவா தன் குடும்பத்தைக் காப்பதற்காகப் பேழையை உண்டுபண்ணினான்.

## எபிரெயர் 11: 7

7. விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்துத் தேவஎச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்.

நம்முடைய பிள்ளைகள், குடும்பத்தார் எல்லோரையும் வார்த்தையில் கொண்டுவரவேண்டும். அந்தப் பிள்ளைகள் நன்றாகப் படிக்கிறார்கள், நிறைய பணம் சம்பாதிக்கிறார்கள் என்று அவர்கள் போக்கில் போகக்கூடாது. நன்றாகப் படிக்கட்டும், சம்பாதிக்கட்டும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆனால் அவர்களைக் கர்த்தருக்குள் வழிநடத்தவேண்டும். நோவா அதைத்தான் செய்தான். அழிவு வரப்போகிறது. அதை இன்னும் அவன் பார்க்கவில்லை. ஆனால் காணாதவைகளைக்குறித்துத் தேவ எச்சரிப்புப்பெற்று தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான். அவன் தேவனுடைய நீதியைப் பெற்றுக்கொண்டான்.

ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்தான். அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். இப்பொழுது நாம் அதைப் பெறவேண்டும். நோவா காலத்தில் ஜனத்தொகை மிக அதிகம். அதில் ஆண்டவர் ஒரு சிறு கூட்டத்தைத் தெரிந்துகொண்டார். இன்றைக்கும் மக்கள் தொகை அதிகமாகியிருக்கிறது. இதோ, உலகம் ஜனங்களால் நிறைந்திருக்கிறது. பாவிகளால் நிறைந்திருக்கிறது. அக்கிரமங்களினாலும் நிறைந்திருக்கிறது, தேவனுடைய பார்வையில் உலகம் சீர்கெட்டதாயிருக்கிறது. இந்த நேரத்தில் நம்முடைய குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக கர்த்தர் நமக்கு ஒரு செய்தியைக் **(Message)** கொடுத்திருக்கிறார். இந்தச் செய்திதான் அந்தப் பேழை. அல்லேலூயா.

வார்த்தைக்குக் கீழ்ப்படி. கீழ்ப்படிந்தாலும், கீழ்ப்படியவில்லையென்றாலும், சொல்லவேண்டியது நம்முடைய கடமை. சொல்லிக்கொண்டே இருந்தால் ஒரு நாளில் அது கிரியைச் செய்யும். நம்முடைய பிள்ளைகளுக்கு நாம் சொல்லவேண்டும். நம்முடைய குடும்பத்தாருக்கு நாம் சொல்லவேண்டும். **"**பேழைக்குள்ளே வாருங்கள். நியாயத்தீர்ப்பு தாக்கப்போகிறது, அழிவில் சிக்கிக்கொள்ளாதே, அக்கினியில் சிக்கிக்கொள்ளாதே**"** என்று சொல்லவேண்டும். லோத்துவிற்காக ஆபிரகாம் போய் இரண்டு முறை முயற்சிசெய்தான். அக்கினியில் சிக்கிக்கொள்ளாதே என்று இழுத்துக்கொண்டு வந்தான். மறுபடியும் அவன் அக்கினியில் சிக்கக்கூடாதென்பதற்காகப் பரிந்துபேசினான். இவ்வளவு ஜெபம்பண்ணிப் பார்த்தான். வசனத்தைச் சொல்லிப்பார்த்தான். ஆனாலும் அவன் திரும்ப திரும்ப சென்றதால் என்ன ஆனது? நாம் ஜெபிக்கிறோம், வார்த்தையைச் சொல்லுகிறோம். ஆனால், **"**நான் அக்கினிக்குத்தான் போவேன், அக்கினிக் கடலில்தான் போய் விழுவேன்**"** என்று சொன்னால் என்ன செய்யமுடியும்.

ஆபிரகாம் அவ்வளவு முயற்சிசெய்தான். ஆனாலும் அந்த லோத்து விழுந்துபோனான். அது அவன் குடம்பத்துக்கு அடுத்த சொந்தம் **(Next Relation)**. ஆனால், உங்களுடைய சொந்த குடும்பத்தை அப்படி விடக்கூடாது. குடும்பத்துக்கு அப்பாற்பட்டவர்களுக்கு நாம் சொல்லவேண்டியதுதான், ஆனால் அவர்கள் விழுந்துபோனால் அதற்கு நாம் பொறுப்பல்ல. ஆனால் உங்களுடைய சொந்த குடும்பமாகிய உங்கள் மனைவி, பிள்ளைகளை இரத்தத்தினடியில் கொண்டுவரவேண்டும். நோவா **(Noah)** கொண்டுவந்தான். ராகாப் **(Rahab)** கொண்டுவந்தாள். கொர்நேலியு **(Cornelius)** கொண்டுவந்தான். சிறைச்சாலைக்காரன் **(Jailor)** கொண்டுவந்தான். எத்தனை உதாரணம் இருக்கிறது! அது அவர்களுடைய சொந்த குடும்பம். நம்முடைய சகோதரனுடைய குடும்பத்தைக் கொண்டுவரமுடியாமல் இருக்கலாம். நம்முடைய சகோதரியின் குடும்பத்தைக் கொண்டுவரமுடியாமல் இருக்கலாம். நம்முடைய சொந்தக்காரர்களைக் கொண்டுவரமுடியாமல்

இருக்கலாம். ஆனால், நம்முடைய சொந்த குடும்பத்தைக் கொண்டுவரமுடியும் என்பதற்கு நோவா ஒரு அடையாளமாக இருக்கிறான்.

அவன் தன் குடும்பத்தைப் பாதுகாப்பதற்காகப் பேழையை உண்டுபண்ணினான் **(He prepared an ark for saving his household)**. அவன் நியாயத்தீர்ப்புக்கு மேலாகச் சென்று, மறுபடியும் இந்த உலகத்துக்கு வந்தான் **(Noah was going above the judgment, to come right back)**. யார் யார் மேலே போகிறார்களோ, அவர்கள் திரும்பவும் பூமிக்கு வருவார்கள். அல்லேலூயா. அப்பொழுது உலகம் ஏதேனாக இருக்கும் **(Eden restored again)**. விசுவாச உலகத்திற்கு வரப்போகிறோம். ஆமென். அதற்காகத்தான் ஆண்டவர் இன்றைக்கு உரிமைப்பத்திரத்தோடு **(Title Deed)** வந்திருக்கிறார். ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டு தேவரகசியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய பேரைக் காண்கிறோம். நாம் சுதந்தரவாளி. அல்லேலூயா.

நம்முடைய சபை **(Our church)**, நம்முடைய குடும்பம் **(Our family)** எல்லாரும் பேழைக்குள் வந்தால், எல்லாரும் மேலே போய், மறுபடியும் இங்கே வந்து ஆளுகைசெய்வோம். இதோ, ஏழாம் எக்காளமானது நியாயத்தீர்ப்பாக இருக்கிறது. அது முற்றிலுமான அழிவைக் **(Total Annihilation)** கொண்டுவரும். ஆனால் நமக்கு, அது ஆயிர வருட ஆளுகையைக் **(Millennium)** கொண்டுவரும். அல்லேலூயா. நமக்கு அது ஏதேனை மறுபடியும் கொண்டுவருகிறது. ஆமென். இது ஏதேனுக்குச் செல்லவேண்டிய நேரம். ஆதாம் இழந்துபோன எல்லாவற்றையும் மீட்பதற்காகத்தான் இயேசுகிறிஸ்து சிலுவையில் இரத்தம் சிந்தினார். இன்றைக்கு, உங்கள் பேர் அங்கே இருக்கிறதென்பதை உங்களுக்குக் காண்பிப்பதற்காகத்தான் உரிமைப்பத்திரத்தோடு இறங்கிவந்திருக்கிறார். திறக்கப்பட்ட புஸ்தகத்தை நமக்குக் காண்பிக்கிறார். நாம் அந்த நிச்சயத்தைப் **(Assurance)** பெறும்போது, அவர் நமக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கான கிருபையைத் **(Rapturing Grace)** தந்து நம்மை மேலே கொண்டுசெல்வார். பின்பு உலகத்தை நாம் ஆளுகை செய்வோம். ஏழு எக்காளங்கள் நிறைவேறும். உலகத்தாருக்கு அது தெரியாது. உலகத்தை நல்ல உலகமாக மாற்றிவிடலாம் என்று அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள். விஞ்ஞானிகள் நினைக்கிறார்கள். அவர்களால் அது முடியாது. ஆண்டவர் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அல்லேலூயா. ஏதேன் மறுபடியும் வரும். நாம் அதிலே வாசம்பண்ணுவோம். நாமெல்லாரும் ஜெபம்செய்வோம்.

ஏழு எக்காளங்களை நோவா காலத்தில் நாம் காண்கிறோம். நோவா காலத்தில் இயற்கையானது கெட்டுப்போனது. மனுஷன் அதைக் கெடுத்துப்போட்டான். ஜனங்களும் கெட்டுப்போனார்கள். அழிவு வந்தது. ஏழாம் எக்காளம் அர்மகெதோனாக இருக்கிறது. முற்றிலுமான அழிவைக் குறிக்கிறது. புதிய பூமிக்கு வருவதும், ஆயிர வருட ஆளுகைக்கு வருவதும் ஏழாம் எக்காளம் தான். நாம் இன்றைக்கு ஏழாம் எக்காளத்தில் இருக்கிறோம். ஆயிர வருட அரசாட்சி **(Millennium)** வரப்போகிறதென்ற அறிவிப்பு **(Announcement)** இப்பொழுது கொடுக்கப்படுகிறது. ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.

ஏழு இடிமுழக்கங்கள் **(7 Thunders)** தான் அந்த கெம்பீர சத்தம். அந்த வெளிப்பாட்டை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அது நமக்கு ஆயிர வருட ஆளுகையைக் கொண்டுவரும். பெரும்பாலான மக்கள் அக்கினியில் சிக்கிக்கொள்வார்கள். அன்றைக்குத் தண்ணீர் ஞானஸ்நானம். இப்பொழுது அக்கினியினால் இந்தப் பூமி சுத்திகரிக்கப்படும். அதன்பின்பு, பரிசுத்தவான்கள் உலகத்தை ஆளுகை செய்வார்கள். உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் இந்த உலகத்தை ஆளுகை செய்வார்கள் என்று தானியேல் 7:18 ல் வாசிக்கிறோம். பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள். பரிசுத்தவான்களுக்கு இந்த

உலகம் கொடுக்கப்படப்போகிறது. ஆதாம் ஏவாளுக்கு **(Adam and Eve)** அது கொடுக்கப்படப்போகிறது. அது கிறிஸ்துவுக்கும் அவருடைய மணவாட்டிக்கும் **(Christ and His Bride)** கொடுக்கப்படப்போகிறது. ஆகையால், கர்த்தருக்கு நாம் ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கலாம். கர்த்தரை நோக்கி நாம் ஜெபிக்கலாம்.

கர்த்தர் எவ்வளவு நல்லவராக இருக்கிறார். அவர் இந்த உலகத்தை நமக்கு ஏதேனாக மாற்றிக் கொடுக்கப்போகிறார். ஏழாம் தூதனுடைய செய்தி எல்லாவற்றிற்கும் முடிவை ஏற்படுத்துகிறது. ஏழு எக்காளங்கள் முடிவை ஏற்படுத்துகிறது. கர்த்தருக்கு நாம் ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கலாம்...அவர் நமக்கு வெளிப்படுத்தின சத்தியங்களுக்காக ஸ்தோத்திரம் செலுத்துவோம். நன்றி இயேசுவே... உமக்கு ஸ்தோத்திரம் ஆண்டவரே...நீர் எங்களுக்கு உதவி செய்யும். ஆயிர வருட ஆளுகைக்கு எங்களை ஆயத்தப்படுத்தும்..

எங்களை நேசிக்கிற நல்ல ஆண்டவரே உம்மைத் துதிக்கிறோம். நோவா காலத்தைப்போல ஒரு காலத்திலே நாங்கள் ஜீவிக்கிறோம். உம்முடைய வருகையின் காலத்திலும் சமயத்திலும் **(Time and Season)** இருக்கிறோம். ஆனால் அந்த நாளையும் நேரத்தையும் **(Day and Hour)** அறியாமல் இருக்கிறோம். அது, சேவல் கூவும் நேரமா, அதிகாலையா, அல்லது எந்த வேளை என்று அறியாதிருக்கிறோம். நாங்கள் அதற்காக ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறோம். எங்களை ஆயத்தப்படுத்துகிறவர் நீர் தான். அந்த நேரம் வரும்போது எங்களுக்கு நீர் அதை வெளிப்படுத்துவீர். நாங்கள் கண்ணிமைப்பொழுதில் மறுரூபமாக்கப்பட்டு, நியாயத்தீர்ப்பிற்கு மேலாக சென்றுவிடுவோம். உலகத்தை நியாயத்தீர்ப்பு தாக்கும்போது, நோவாவின் பேழை தண்ணீருக்கு மேலாக போனதுபோல, நாங்களும் மேலே போய் பின்பு உலகத்துக்கு வருவோம். உம்மோடுகூட வந்து ஆயிரம் வருஷம் இந்த உலகத்தை ஆளுகை செய்வோம். விஞ்ஞான உலகமல்ல. விசுவாச உலகத்தில் நாங்கள் ஜீவிப்போம் என்பதை அறிந்திருக்கிறோம்.

ஏதேனை எங்களுக்குத் திரும்பத் தருகிறீர். அது உம்முடைய மீட்பின் திட்டமாக **(Plan of Redemption)** இருக்கிறது. கல்வாரியிலே இரத்தத்தைச் சிந்தி, நீர் உரிமைக்கோரியிருக்கிறீர். நாங்கள் உம்முடைய பிரஜைகளாக இருக்கிறோம். கர்த்தாவே, எங்களுக்கு இது சொந்தமானது. அந்த ராஜ்யம் வரக் காத்திருக்கிறோம். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறதுபோல இந்தப் பூமியிலும் செய்யப்படுவதாக.

எங்களுக்கு ஒரு செய்தியைக் கொடுத்திருக்கிறீர். நாங்கள் வலதுபுறமாவது இடதுபுறமாவது சாயக்கூடாது. நாங்கள் அந்த நேர் கோட்டிலே செல்லுவோமென்றால், வார்த்தையோடுகூட எங்கள் ஜீவியத்தை நாங்கள் வரிசைப்படுத்துவோமென்றால் **(Line up with the Word)**, நிச்சயமாக நாங்கள் உம்முடைய வருகையில் பங்குபெறுவோம். ஆண்டவரே, இப்பொழுது புஸ்தகத்தைத் திறந்து எங்களுக்குத் தெளிவுபடுத்துகிறீர். எங்களுடைய பேர் அங்கே இருக்கிறதென்று ஒவ்வொரு செய்தியும் எங்களுக்கு உறுதிப்படுத்துகிறது. ஒவ்வொரு செய்தியைப் பார்க்கும்போதும், எங்களுடைய பேரை நாங்கள் பார்க்கிறோம். இன்றைக்கும் நீர் எங்களை காணும்படியாகச் செய்திருக்கிறீர். நோவாவோடு நாங்கள் அடையாளப்படுத்தப்படுகிறோம். நோவா காலத்தில் மக்கள், புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும் இருந்தார்கள். உலகம் கொடுமையினாலும் யுத்தங்களாலும் நிறைந்திருந்தது. அதைப்போலவே இந்த உலகமும் இப்பொழுது இருக்கிறது.

அணுஅக்கினிக்கு **(Atomic Fire)** இரையாகும்படியாக ஜனங்களை நீர் வைத்திருக்கிறீர். நாங்கள் மேலே எடுத்துக்கொள்ளப்படுவோம் என்று அறிந்திருக்கிறோம். இப்பொழுது நாங்கள் பேழையில் இருக்கிறோம். செய்திக்குள்ளாக இருக்கிறோம். கதவு அடைக்கப்படும் வேளை வந்துவிட்டது. ஒருவரும் கிரியைச் செய்யக்கூடாத காலம் வருகிறது. யார் யார் பேழைக்குள் வரவில்லையோ, அவர்கள் வரத்தக்கதாக நீர் கிரியைச் செய்யும். கர்த்தாவே நீர் இரங்கும். நாங்கள் குழந்தைகளாக இராதபடி எங்களைப் பூரணப்படுத்துவீராக.

ஆசீர்வதியும் ஆண்டவரே, இரக்கமாயிரும். வசனத்தைக் கேட்ட அனைவரையும் ஆசீர்வதியும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.